# காற்றுவெளி

நினைத்தபோது வெளிவரும் இதழ்

மார்ச் - 2008 இதழ் - 9



# காற்றுவெளி

இதழ் – 9
மார்ச் 2008
(நினைத்தபோது வரும் இதழ்)

ஆசிரியர் :
**ஷோபா**

**தொடர்புக்கு :**
R. MAHENDRAN
34 REDRIFFE RD, PLAISTOW
LONDON E 13 OJX, U.K

**கணினி அச்சுக்கோர்ப்பு**
தருமஇரத்னகுமார்,
தமிழன் வரைகலையகம்,
காஞ்சிபுரம்.

**அச்சிடல்**
கவிக்குயில் அச்சகம்,
சென்னை – 5.


நண்பர்களுக்கு வணக்கம்!

எமது தாயகத்திற்கு
சோகம்,
போரின்
கொடு முகங்களின் வடுக்கள்,
பட்டினிச்சாவு,

இன்னும்...
பதிவுகளாக்கும்
காலத்தின் தேவை
நம் முன்னே விரிந்துள்ளது.

எந்தப் பாசறையிலிருந்தும்
இலக்கியம் பேசப்படுமாயின்
எமது வாசல்
திறந்தே இருக்கும்.

பல சிரமங்கள் -
இருட்டடிப்பு -
ஏமாற்றம் -
இவற்றுக்கு மத்தியில்
ஈழத்து நூல் கண்காட்சி
நடந்து முடிந்திருக்கிறது.

இக்கண்காட்சி
பல புதுமுகங்களையும்
உருவாக்கியிருந்தது
பிரமிப்பைத் தந்தது.

அடுத்த இதழிற்கான
ஆக்கங்களை
உடன்
அனுப்பி வையுங்கள்.

அன்பளிப்புகளை
**R.MAHENDRAN**
என எழுதி அனுப்புங்கள்.
விமர்சனங்களை எழுதுங்கள்.

நன்றியுடன்...
**- ஷோபா**

# சர்வதேச தமிழ் வானொலியின் யேர்மன் கலையகத்தில் இருந்து 20.08.2006 ஞாயிறுதினம் காலை 11.00 மணிக்கு வண்ணை தெய்வம் அவர்களால் தயாரித்து ஒலிபரப்பான "ஏடும் எழுத்தாணியும்" நிகழ்ச்சியில் அறிமுகமான "காற்றுவெளி" கவிதை இதழின் நிகழ்வின் பிரதியாக்கம்.

நேயர்களே! இன்றைய தினம் 'நினைத்தபோது வெளிவரும் இதழ்' என்ற அடைமொழியோடு லண்டனில் இருந்து வெளிவந்திருக்கும் "காற்று வெளி" சஞ்சிகையின் யூலை இதழை முதலில் அறிமுகத்திற்கு எடுத்துக் கொள்கின்றோம்.

வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் வழமையை விட யூலைமாத காற்றுவெளி மிகவும் மாறுபட்டு வெளிவந்திருக்கிறது. முன்னர் வெளிவந்த காற்று வெளி வழமையான சஞ்சிகைகளின் அளவில் இல்லாது சற்று மாறுபட்ட அமைப்பில் இருந்தாலும் அந்த வடிவம் அதற்கு ஒரு தனித் தன்மையைக் கொடுத்திருந்ததாகவே என்னால் உணர முடிந்தது. இந்த இதழ் வடிவத்தை மட்டுமல்ல உள்ளடக்கத்திலும் வழமையில் இருந்து மாறுபட்டு முழுக்க முழுக்க கவிதைச் சிறப்பிதழாக மலர்ந்திருக்கின்றது.

கவிதைக்கு மட்டும் தனியானதாக ஒரு சஞ்சிகை வெளிவருவதென்பது நான் அறிந்த வரையில் சென்னையில் இருந்து வை.சொக்க லிங்கம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு "இலக்கியம்" என்ற சஞ்சிகையும், மதுரையில் இருந்து (பெயர் தெரியவில்லை) இன்னுமொரு இதழும் வெளிவந்ததாக அறிந்திருக்கின்றேன். இதுதவிர ஜேர்மனியில் இருந்து திருமதி.விக்னா-பாக்கியநாதன் அவர்களினால் "கலைவிளக்கு" என்னும் கவிதை இதழும் சில பதிப்புகள் வெளி வந்தன. இப்பொழுது அதுவும் நின்றுவிட்டதாக அறிகிறேன். இந்த வேளையில் "காற்றுவெளி" சஞ்சிகையின் இம்மாத இதழ் கவிதைச் சிறப்பிதழாக வெளிவந்திருக்கின்றது.

கவிதைக்கு மட்டும் ஏன் தனியிதழ் வெளியிட வேண்டிய அவசியம் வந்திருக்கின்றது என்னும் கேள்வியொன்றை நாமே எழுப்பி அதற்கு நாமே பதிலையும் தேடிக்கொள்ள முயற்சித்தோம்!

புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் நம்மவர் களில் இன்று நிறையப் படைப்பாளிகள் உருவாகி யிருக்கின்றார்கள். அவர்களில் கவிதை புனைபவர் களே மிக அதிகம்! அந்தப் படைப்பாளிகளின் படைப்புகளை வாசகர்முன் அறிமுகப்படுத்து வதற்கு காற்றுவெளி போன்ற சஞ்சிகைகள் வருடத்திற்கு ஒரு இதழை யென்றாலும் இப்படி கவிதைச் சிறப்பிதழாக வெளியிடுவது பாராட்டுக் குரியதே.

ஆனால் காற்றுவெளியின் இந்த கவிதைச் சிறப்பிதழில் அப்படியான புதிய படைப்பாளிகள் அல்லது நன்கு அறிமுகமில்லாத படைப்பாளி களின் கவிதைகள் வந்திருக்கின்றனவா என்று பார்த்தால் பதில் கேள்விக்குறிதான். பரவலாக பல ஊடகங்களிலும் எழுதி வரும் படைப்பாளி களின் கவிதைகள்தான் இந்தக் கவிதைச் சிறப்பிதழிலும் இடம் பெற்றிருக்கின்றது. இவைகளைக் கூட பெற்றுப் பிரசுரிப்பதற்கு ஆசிரியர் எவ்வளவு சிரமப்பட்டிருப்பாரோ? என்பதையும் சிந்தித்துப் பார்ப்பதனால்தான் கவிதைக்கென தனிச் சஞ்சிகை வேண்டுமா, என்ற கேள்வி எம்முன் எழுகிறது.

முன்பு திருமதி.விக்னா-பாக்கியநாதன் வெளியிட்ட 'கலை விளக்கு' கவிதையிதழிலும் அனேகமான கவிஞர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்த வர்களாகவே இருந்ததைக் காணமுடிந்தது. இதன் காரணம்தான் என்ன? அறிமுகமாகிவரும் எம்மவர்களின் கவிதைகளை பிரசுரிப்பதற்கு இவர்கள் மறுக்கின்றார்களா? என்றால் அதுவும் இல்லை! அப்படியாயின் வேறு என்ன காரணம் தான் இருக்க முடியும், இந்தப் புதிய படைப்பாளி கள் வானொலிகளில் இரண்டு கவிதைகளைப்

படித்து விட்டாலோ அல்லது பத்திரிக்கைகளில் இவர்களின் இரண்டு கவிதைகள் பிரசுரமாகி விட்டாலோ தாங்கள் பெரிய கவிஞர்கள் ஆகிவிட்டோம் என்ற தவறான எண்ணம் இந்தப் படைப்பாளிகளுக்கு அவர்களை யறியாமலேயே அவர்களுக்கு வந்து விடுகின்றது. அதன்பின்பு இப்படைப்பாளிகள் தங்களிடம் பிரசுரத்தார்கள் விரும்பிக் கேட்டால்தான் எழுதிக் கொடுப்போம் என்ற வறட்டுக் கௌரவத்திற்கு அடிமையாகி விடுகின்றார்கள் என்பது எனது கணிப்பு. இந்த இதழில் பிரசுரமாகியிருக்கும் கவிதைகளில் எத்தனை கவிதைகள் காற்று வெளியைத் தேடி வந்தவை! எத்தனை கவிதைகள் வேண்டிப் பெற்றுக் கொண்டவை! என்பது ஆசிரியருக்குத் தான் வெளிச்சம்.

இன்று கவிதைகள் என்பவை சங்க காலத்தை விட்டு வெளிவர முடியாத இலக்கியவாதிகளிடம் இருந்து நகர்ந்து சமூகத்தோடு முட்டி மோதிக் கொண்டிருக்கின்ற இன்றைய இளம் தலைமுறை யினரிடம் இருக்கின்ற உணர்வுகள் மரபுகளை மீறிய கவிதைகளும் புதுக்கவிதைகளாகவும் வெளிவந்து கொண்டிருக்கின்றது. அத்தகைய படைப்பாளிகளின் உணர்வுகளை வெளிப்படுத்த இன்று கவிதைகளுக்கு தமிழ்நாட்டைவிட இலங்கையில் உள்ள பத்திரிக்கைகளும் சஞ்சிகை களும் ஐரோப்பாவில் உள்ள அனேகமான ஊடகங்களும் முக்கியத்துவம் கொடுக்கின்றன என்பதும் கண்கூடான உண்மை.

ஆனாலும் காற்றுவெளியின் கவிதையிதழில் ஐரோப்பாவில் வாழ்கின்ற படைப்பாளிகளின் கனகாத்திரமான கவிதைகளைக் காண முடிய வில்லை. 15 கவிதைகளுடன் வெளியாகியிருக்கும் இந்தக் கவிதைச் சிறப்பிதழ் கனதியாக இருக்க வேண்டும் என்பதற்காக ஆசிரியர் சோபா அவர்கள் அதில் ஆறு கவிதைகளை வேறு வேறு பத்திரிக்கைகள் சஞ்சிகைகளில் இருந்து எடுத்து மறுபிரசுரம் செய்திருக்கின்றார்கள்.

ஒரு படைப்பை மறுபிரசும் செய்வதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றது. ஒன்று காலம் பல கடந்தாலும் அந்தக் கவிதைகளின் கருத்துக்கள் இன்றைக்கும் தேவையாக இருக் கின்றது. அல்லது அவசியமாக இருக்கின்றது என்றும் எடுத்துக் கொள்ளலாம். இரண்டாவது புதிதாக எழுதுபவர்களுக்கு முன் உதாரணமாக வும் இருக்கலாம். இதில் எந்தக் காரணங்களுக் காக அக் கவிதைகள் பிரசுரிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் கவிதைச் சிறப்பிதழுக்கு அக்கவிதைகள் அனைத்தும் கனகதியை ஏற்படுத்தியிருக்கின்றது என்பது உண்மைதான்.

அப்படியான கடும் சொற்பிரயோகங்கள் பாவிக்கப்பட்ட கவிதைகளை மறுபிரசுரம் செய்ததுபோல நெகிழ்வான ஓரிரு கவிதைகளை யும் சேர்த்திருக்கலாம் என்று எண்ண வைத்தது. நெகிழ்வான கவிதை என்னும்போது எனக்கு சட்டென ஞாபகத்திற்கு வந்தது மு.மேத்தா அவர்களின் ஒரு கவிதை,

> தாங்க முடியாத மகிழ்ச்சியில் - மரங்கள்
> தலையசைக்கின்றனவே
> பூமிக்கடியிலுள்ள வேர்கள்
> புல்லாங்குழல் வாசிக்கின்றனவோ?

என்ற கவிதையில் உள்ள நெகிழ்வும் அக் கவிதையில் உள்ள அர்த்தங்களும் படிப்பவர் களை ஒரு நொடியில் தம்வசப்படுத்திக்கொள் கின்றது. எமது முன்னோர்கள் ஒரு பழமொழி சொல்வார்கள், "கெட்டிக்காரக் கோழிகள் முட்டைக்குள் இருந்தே கூவுமாம்" என்று. எமது கவிஞர்கள் தங்கள் கெட்டித்தனங்களைக் காட்டி. தங்கள் கவிதைகளை இந்த நெகிழ்வுமுறைக் குள்ளும் கொண்டு வர முயற்சிக்க வேண்டும்.

திருமதி விக்னா-பாக்கியநாதன் எழுதியுள்ள 'கவிதைக்கலை' என்ற கட்டுரை பொதுவாக இன்று கவிதை புனைபவர்களுக்குத் தேவையான கருத்துக்களைத் தந்திருந்தாலும் கட்டுரையாள ரும் ஒரு கவிஞராக இருப்பதனால் கவிஞர்களுக் காக அளவிற்கு அதிகமாகவே வக்காலத்து வாங்கியிருக்கின்றார் என்பதை என்னால் உணர முடிகின்றது.

கவிஞர்கள் சுதந்திரமானவர்கள். கட்டுப்பாடற் றவர்கள். தடைகளை உடைப்பவர்கள். உணர்ச் சியை அப்படியே வெளிப்படுத்துபவர்கள் என்ற அவரது கருத்து நூற்றுக்கு நூறுவீதம் உண்மை யாக இருந்தாலும் புலமைத்தன்மையை தண்டிக்க அல்லது குற்றவாளிக் கூண்டில் நிறுத்த எவரா லும் முடியாது என்ற கருத்தும் நூற்றுக்கு நூறு வீதம் ஏற்றுக்கொள்ள முடியாதவையே. கவிஞர் கள் நீதிபதிகள் அல்ல என்பதையும் எந்தப் படைப்பானாலும் அது விமர்சனத்திற்கு உட் படுத்துவதைத் தவிர்க்க முடியாது என்பதையும் படைப்பாளிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

"தெரிதலில்" இருந்து மறு பிரசுரத்திற்குள் ளாகியுள்ள சி.சுரேஸ் அவர்களின் தலைப் பில்லாத அந்தக் கட்டுரையும் படைப்பாளிகள் கண்டிப்பாக படிக்க வேண்டிய ஒன்றாகும். இது திருமதி. விக்னா-பாக்கநாதன் அவர்களின் கட்டுரைக்கு அப்பாலும் சென்று இன்றைய தரமான படைப்பாளிகளின் பெயர்களையெல் லாம் சுட்டிக் காட்டி ஒப்பீடு செய்திருப்பது ஒரு படைப்பாளி இன்னொரு படைப்பாளியின் வெளியீடுகளைத் தேடி எடுத்துப் படிப்பதற்கு தூண்டுகோலாக அமையும் என்பது எனது கணிப்பாகும்.

தமிழ்நாட்டின் மூத்த படைப்பாளியான திரு வாளர் வல்லிக்கண்ணன் அவர்கள் ஜனவரி மாத காற்று வெளியை கணிப்பீடு செய்திருந்த மையை

அப்படியே பதிவு செய்திருப்பது சிறப்பிற்குரிய தாகும். திரு.வல்லிக்கண்ணன் போன்ற மூத்த இலக்கியவாதிகளின் கைகளில் எல்லாம் காற்று வெளி தவழ்வது காற்றுவெளிக்கு பெருமையான தொன்றே.

இறுதியாக ஆசிரியரின் கவனத்திற்காக எங்கள் கருத்தையும் சொல்லிவைக்க ஆசைப் படுகின்றோம். இதுவரை சென்னையில் இருந்து பதிப்பித்து வந்த காற்றுவெளியை உங்கள் நேரடிக் கண்காணிப்பில் இருந்து வெளிவர வேண்டும் என்பதற்காக இந்த இதழை இலண்ட னில் இருந்தே பதிப்பித்து வெளியிட்டிருக்கின் றீர்கள். ஆனால் இந்த இதழில்தான் எழுத்துப் பிழைகள் கூட்டி ஒரு கடகத்துக்குள் அள்ளும் அளவிற்கு ஏராளம் இடம் பெற்றிருக்கின்றது! அதுபோல கட்டுரையில் பத்தி பிரிப்பதிலும் தவறுகள் இடம் பெற்றிருக்கின்றது. இது நேரடிக் கண்காணிப்பில் ஏற்பட்ட பாரிய தவறாகும்! இவற்றை மிகக் கவனமெடுத்து நிவர்த்தி செய்ய வேண்டும்.

இதுதவிர கவிஞர்களின் புகைப்படங்களையும் பிரசுரித்து அவர்களை கௌரவிக்கலாம். முடிந் தால் கவிதைகளுக்குக்கூட பொருத்தமான படங் களை அருகினில் பதியவைத்தால் இன்னும் அழகாக இருக்கும். இது இதழுக்கும் அழகைத் தரும். ஒருவேளை இப்படியான எண்ணங்களை எமக்கு முன்னரே ஆசிரியரும் யோசித்தும் இருக் கலாம். ஆதலால் இனிவரும் இதழ்களில் இவை களை எதிர்பார்க்கிறோம்.

மேலும் இந்நிகழ்வை செவிமடுத்துக் கொண்டிருக்கின்ற படைப்பாளிகளுக்கும் நேயர் களுக்கும் ஒரு செய்தியைச் சொல்ல நாம் விரும்பு கிறோம். நீங்களும் விமர்சனம் எழுதுங்கள். ஒவ்வொரு படைப்பாளிகளும் இன்னொரு படைப்பாளியின் ஆக்கத்தை உங்கள் பார்வையில் விமர்சனம் செய்யுங்கள். அது உங்களையும் நெறிப்படுத்த பேருதவியாக இருக்கும் என்பதை கருத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். அந்த வகையில் இந்த இதழில் வெளிவந்திருக்கும் எனது 'நாளைய நாள் எப்படியோ' என்ற கவிதையை யாராவது விமர்சனம் செய்தால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன். அப்படியான உங்கள் விமர்சனங்கள் கண்டிப்பாக அடுத்த இதழில் வெளிவரும்.

உங்கள் விமர்சனங்களை அனுப்புவதற்கான காற்று வெளியின் முகவரி:

முல்லைஅமுதன், 34 REDRIFFE RD, PLAISTOW, LONDON E 13 OJX, UK என்பதாகும்.

தொலை பேச: 00 44 208 586 77 83.

நல்லது நேயர்களே! இத்தோடு காற்று வெளியின் அறிமுகத்தை நிறைவு செய்து கொள்கின்றோம்.❑❑❑

## கவிஞர் அறிமுகம்

தமிழீழத்தின் வடபுலத்தில் 03.03.1955 அன்று பிறந்த கணபதி கணேசன் நல்ல இலக்கியவாதி.

பலருடனும் நட்புடன் வாழ்ந்தவர்.

80களில் ஒட்டுமடம் யாழ்ப்பாணத்தில் கௌரி அச்சகம் ஒன்றினை நடாத்தியபடி 'மேகம்' எனும் இலக்கியச் சஞ்சிகையினை நடாத்திவந்தார்.

இவரின் மனைவி கௌரியும் ஒரு கவிதாயினிதான். யாழ் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்.

கணபதி கணேசலிங்கம் எனும் இயற் பெயருடன் 'கணபதிகணேசன்' 'மதுரா' எனும் புனைபெயருடன் எழுதிவந்தார்.

ஈழநாடு, தினகரன், சிரித்திரன், இலண்டன் ஈழகேசரி, மலேசியா இதயம், என்பவற்றில் எழுதியவர். மலேசியாவில் வெளிவந்து கொண்டிருக்கும் 'செம்பருத்தி' இதழாசிரியர்களுள் ஒருவராகவும் இருந்திருக்கிறார்.

83ல் முல்லை அமுதனுடன் இணைந்து 'புதிய அடிமைகள்' எனும் நூலை வெளியிட்டார். அவ்வாண்டு நடந்து கொண்டிருந்த அரசியல் பிரச்சனையில் தமிழகம் பெயர்ந்து பின்னர் மலேசியாவில் மரணம் வரும் வரைக்கும் வாழ்ந்தவர். மனிதநேயம் மிகுந்தவர். காவலூர் ஜெகநாதன், அன்பு நெஞ்சன், ராதையன், முல்லை அமுதன், சுதாஜ், புதுவை ரத்தினதுரை போன்றோருடன் நட்பாய் இருந்தவர்.

இன்று நம்மிடையே இல்லை.

அவரின் இலக்கியம் நம்முடன் வாழ்கிறது.

❑


எழுதுங்கள்...! தயாராகிறது!!

**"இனி வசந்தம் வரும்!"**

(கவிதைத் தொகுதி)

உங்கள் கவிதைகளை
காற்றுவெளி முகவரிக்கு
அனுப்புங்கள்.

**ஈழ முரசு**

(வாராந்தப் பத்திரிக்கை)

தொடர்புக்கு:
**POOBALAN**
**22 RUE PERDONNET**
**75010 PARIS**
**FRANCE**

## நாம் ஒதுக்கும் அவர்கள்

வறுமை படர்ந்தொழுகும்
ஒரு தேசத்தில்
வறுமை ஒழிக்கும்
ஒய்வற்ற இயந்திரங்கள்
அவர்கள்.

பிறருக்காகவே
அவதாரமெடுத்து
கூனிக்குறுகி
வளைந்த வில்லாவார்கள்

தோல்கள்
சூரியனில் குளித்து
வியர்வைகள்
மண்ணை முத்தமிடுகின்றன.

முத்தமிடப்பட்ட மண்ணில்
எமக்கான எல்லாம்
அங்கிருக்கும்
அவர்களைத் தவிர...

நமது கனவெல்லாம்
நிறைவேற சேற்றுக்குள்
புதையுண்டு
பிரார்த்தனை செய்து
நிலத்தை கூறாக்கி
இரணம் தேடுவார்கள்

நாம் சாப்பிட்டு
மலம் கழிப்பதாய்
ஒதுக்கி விடுகின்றோம்
அவர்களை.

**- பொத்துவில் தாஜகான்.**


**பெண்**

வெளியீடு:

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்,

20 டயஸ் லேன், மட்டக்களப்பு, இலங்கை.

**மண்வாசம்**

(கலை இலக்கியச் சஞ்சிகை)

18 MONDEO DRIVE # 639

SCARBOROUGH ONT

M I P 5 C 8

CANADA


## கவிதை நூல் அறிமுகம்:

**"மலையக வாழ்வு உணர்வுகளை ஆழமாய் நோக்கும் கனிவுமதியின் "கட்டாந்தரை"**

– ஏ.எஸ்.எம். நவாஸ்.

**"வந்தகடன் முடிந்தவுடன்**
**வந்தவழி திரும்ப**
**காத்துக் கிடக்கிறது**
**இன்னொரு உயிர்.**

**நன்றிக் கடன்**
**சொல் கடன்**
**பிறப்புக் கடன்**

**இருப்புக் கடன்**
**இறப்புக் கடன்**
**கடன் கடன்**
**எல்லாமே கடன்...**
**கடன் பட்டவன்**
**கடமைப் பட வேண்டியுள்ளது**
**காலம் காலமாக?"**

கவிஞர் கனிவுமதி எழுதி சில மாதங்களுக்கு முன் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வெளியிடப் பட்ட "கட்டாந்தரை" தொகுதியில் இடம் பெற்றதே மேலிருக்கும் கவிதை. மிக அண்மை யிலேயே கவிஞர் கனிவுமதியின் இத்தொகுதியை எனக்கு வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. நூலின் மூன்றாம் பக்கத்தை அம்மாவுக்கும் அப்பாவுக்கு மாக சமர்ப்பித்திருக்கிறார் கவிஞர் கனிவுமதி.

"சிறகடித்தால் வானம் தொடலாம்" என்ற தலைப்பில் சுமார் 19 பக்கங்கள் கவிஞரின் கவிதை கள் பற்றியும், அவரது இயல்புத் தன்மை பற்றியும் நீண்ட மதிப்பீடு ஒன்று செய்திருக்கிறார் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள். அவரது இம்மதிப்பீடானது கனிவுமதிக்குக் கிடைத்த ஒரு முத்திரை என்றும் சொல்லலாம்.

கம்பவாரிதியின் மதிப்பீடு என்னும் முன்னுரை யானது என்ன சொல்கிறதென்று பார்ப்போம்!

"நண்பர் கனிவுமதி தான் கடல் கண்ட அனுப வத்தை கட்டாந்தரை எனும் பெயரிலான இத் தொகுப்பில் வெளியிடுகிறார்." என்று கூறும் கம்ப வாரிதியின் முன்னுரை தொடர்ந்தும் கூறுவ தாவது, "இவன் வாழ்வை ஆகாயத்தில் நின்று

காணாமல் மண்ணில் கிடந்து கண்டவன். பாலும் பஞ்சணையுமாய் அல்லாமல் கூழும் குடிசையுமாய் நின்று உயர்ந்தவர்'' என்கிறது அம் முன்னுரை. வளர்ந்து வரும் ஒரு கவிஞனுக்கு இதைவிட ஒரு முத்திரையான முன்னுரை கிடைக்கப் போவதில்லை.

''கட்டாந்தரை''யில் கவிஞரின் கவிதைகள் என்ன சொல்கிறதென்பதையும் அவதானிப் போம்.

**''காட்சட்டை பருவத்தில்**
**காட்டு மினுக்காம் பூச்சிகள் பிடித்து**
**அதன் மெல்லிய வெளிச்சத்தை**
**பல தடவை பார்வையாய்**
**சுவைத்திருக்கிறேன்.**

**இரவில் மட்டுமேதான்**
**இருப்பைக் காட்டி பறந்த மின்மினிகள்**
**என் மண் இருட்டிலேயே இருப்பது**
**எனக்கு அப்போது விளங்கவில்லை.**

**வெளுத்த கிழக்கில்**
**தெளிவாகத் தெரிந்தது**
**புதைந்த மண்ணில்**
**புதையுண்ட பூர்வீகம்''**

என முடிகிறது அக்கவிதை.

கவிஞர் கனிவுமதியிடம் கருக்கொண்டிருக்கும் சிந்தனையாளுமை, வெளிப்படுத்தல் யாவும் மலையகத்தின் மண்ணின் வேர்களை விலாசம் தேடிச் செல்வதாக அமைந்துள்ளன. இருளையும், மின்மினியையும் சிறுவயதில் ரசித்த அவர் மலையக மண்ணில் புதைந்த சமூகப் பூர்வீகத்தை 'அறிதல்' என்பவற்றில் அதிக அக்கறை காட்டியுள்ளதை அவர் கவிதை நிரூபணம் செய்கிறது. ஏனைய சில கவிதைகள் கொழுந்தெடுப்பது, கங்காணி, துரைமார், தேனீர்சாயம், கோப்பிச் செடி, பெண்கள் உழைப்பு, மண், மலை, மக்கள் என கருத்துச் செறிவுடன் நகர்கிறது. அவரது மற்றொரு கவிதை,

''பூமியில் எந்த விசப்பூச்சிகள் போனாலும் போன இடத்தில் பூக்கள் பூக்கும் ஆனால் மனிதன் நடக்கும் எந்த இடத்திலும் சிறு புற்கள் கூட முளைப்பதில்லை" என்ற அர்த்த புஷ்டியான அக்கவிதையின் சுருக்கமாய் "விசப்பாதங்கள்" என்னும் தலைப்பில் அமையப்பெற்ற கவியே அது. அழகான தத்துவார்த்தமான விடயத்தை இக்கவிதையூடாக கவிஞர் சொல்லி யிருக்கிறார். ஆறறிவு மனிதனைவிடவும் ஐந்தறிவு ஜந்துக்கள் மேலானவை என்பதையே அக்கவிதை அர்த்தம் பதிக்கிறது. சமூக சீர்கேடுகள் கவிஞரின் உள்ளத்தைப் பாதித்திருக்க வேண்டும். அதனாலேயே அதில் விழுந்தபின் எழுந்திருக்கிறார் தன் கவிதைகள் மூலம். ஆழம் அவசியம் என்பதற்கு அத்தாட்சி அக்கவிதை. அவரது பல கவிதைகள் "கட்டாந்தரை"யை காத்திரப்படுத்தியுள்ளது.

**''கத்திக்கொண்டிருக்கும்**
**கடலில் உண்மையான**
**சோகம் என்னவாக இருக்கும்...!!''**

என்றும் கேள்வி எழுப்புகிறார். இவ்வாறு அவர் தனது கவிதைகளில் ஒன்றைக் குத்திக் காட்டுகிறார். ஒன்றைக் கொத்திக் காட்டுகிறார்.

மலை நெற்றியின் மனிதாபிமானப் பொட்டுக்களாய் மதம் கூறாது மனித இனம் என்பதை மட்டுமே பேசும் கனிவுமதியின் கவிதைகளையே இங்கு நாம் தரிசிக்கக் கூடியதாக உள்ளது.

"கட்டாந்தரை" கவிதைத் தொகுதிக்கான பெயராக இருந்தபோதும் நூலின் உள்ளே ஒவ்வொரு பக்கங்களும் கவிதைகளும், படங்களுமாய் செழித்தே இருக்கிறது.

கவிதைக்கேற்ற படங்கள் நல்ல தேர்வு. கவனிக்கத்தக்க நூலின் தலைப்பு. படங்களுடன் கவிதைகள் பகிர்ந்து கொள்ளும் நூல் முயற்சிகள் சமீப காலத்திலிருந்து பெருகி வருவதையும் கணினி முன்னேற்ற வேகத்தை இது புலப்படுத்துவதாகவும் அமைகிறது. ''கட்டாந்தரை''யும் இதற்கு சாட்சி.

படங்களுடன் பதிந்த சில சின்னச் சின்ன எழுத்துக்களை வாசிப்பதற்கு சிரமம் ஏற்படுத்துகிறபோதும் வாசிப்பதன் ஆர்வத்தை அதிகப்படுத்துகிறது.

தை இரண்டாயித்து ஆறாம் ஆண்டின் நூலான "கட்டாந்தரை" நூலின் உரையில் கவிஞர் இப்படிக் கூறுகிறார்.

"சிறு வயதில் இடறி விழுந்து, செம்மண்ணில் புரண்டும் எழுந்தும் ஓடிய என் ஊர் மண்ணைப் பலமுறை எச்சியோடு முத்தமிட்டு எழுந்துள்ளேன். ஆனாலும் இக்கவிதைகள் மூலம் என் ஊர் மண்மீது வைக்கின்ற முத்தம்தான் எந்தப் பொய்க் கலப்பில்லாமலும் உள்ளத் தெளிவோடும் வைக்கும் முதல் ஈரமுத்தம்" என்கிறார்.

நவீன அச்சமைப்பில் 160 பக்கங்களில் "கட்டாந்தரை" காகித மாளிகை கட்டியுள்ளது. ஒரு முதியவர் உடைப்பு நிலத்தின் ஒரு துளி மண்ணைப் பொறுக்குவதாய் முகப்பு அட்டை செதுக்கியுள்ளது "கட்டாந்தரை"க்கு காத்திரம் தருகிறது. கனிதாவின் வெளியீட்டுத் துறைக்குக் கிடைத்த வெற்றி என்றும் எழுதலாம்!

நூல் பெற கீழ்காணும் முகவரி உதவும் என நம்புகிறேன்.

**''கனிதா''**
*15,ஹாவியாலேன், மட்டக்குளி,*
*கொழும்பு-15, இலங்கை.*

❑❑❑

# வல்லினம்

## உலகத் தமிழரை நாடி வரும் ஒரு மலேசியத் தமிழ்ச் சிற்றிலக்கிய ஏடு

என்.செல்வராஜா, நூலகவியலாளர், லண்டன்.

மலேசியாவில் தமிழ் இலக்கியம் இன்றைய தினத்தில் கிட்டத்தட்ட 120 ஆண்டுகளைக் கடந்து விட்டிருக்கிறது. அந்த நாட்டில் குடியேறிகளாகக் கொண்டு வரப்பட்ட காலத்திலேயே தமிழகத்தி லிருந்து தங்களுடைய மூட்டை முடிச்சுகளுடன் கப்பலேறிய தமிழர்கள் இலக்கிய உணர்வுகளையும் கூடவே கொண்டு வந்து புகலிட மண்ணில் சேர்த் திருக்கிறார்கள்.

தமிழகத்திற்கும் கடாரத்திற்கும் இடையே 11ம் நூற்றாண்டில் இராசராசசோழன் காலத்தில் இருந்தே இலக்கியத் தொடர்புகள் உண்டென்று ஊகிக்க முடிந்தாலும், பிரித்தானிய ஆட்சியில் தமிழ்த் தொழிலாளர்களின் பொருளாதாரப் புலப் பெயர்வுக் காலம்தான் தமிழ் இலக்கிய வளர்ச்சியின் அறிமுகக் காலமாக இலக்கிய ஆய்வுகளில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

மலேசியத் தமிழ் இலக்கியத்தை 1946ம் ஆண்டுக்கு முன்னைய இலக்கியம், 1946க்குப் பின்னைய இலக்கியம் என இரு பிரிவாகப் பிரித்துப் பார்த்தால்தான் மலேசிய இலக்கியத்தின் உண்மை நிலையை அறிய முடியும். ஆரம்பம் முதல் 1946 வரை தமிழகத்திலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் வந்தவர்களின் இலக்கியங்களே அதிகமாகக் காணப்படுகின்றன. மலேசிய தனித்துவ இலக்கியமாகவல்லாது அவை தமது தாயக உணர்வுடன் பின்னிப் பிணைந்ததாகவே இருந்து வந்துள்ளன. மலேசிய வரலாற்றில் 1941 முதல் 1945 செப்டம்பர் வரை இருண்ட காலமாகும். 1941ல் 2வது உலகப் போரினால் இலக்கியவளர்ச்சி அங்கு பெருமளவில் தடைப்பட்டிருந்தது. சீரான வளர்ச்சி கண்டு வந்த கல்வி, தொழில், பொருளாதாரம் அனைத்தும் 5 வருடம் தேக்கமடைந்தது. அக்கால கட்டத்தில் மலேசியாவைக் கைப்பற்றியிருந்த ஜப்பானியரின் பிரச்சாரத்திற்காகவே ஓரிரு ஏடுகள் நடாத்தப்பட்டன. சில நூல்களும் வெளிவந்தன.

மலேசியாவில் தமிழ் மொழிக்கல்வி 1816 இல் முதலில் பினாங்கில் தொடங்கப்பட்டது என வரலாற்று நூல்கள் கூறுகின்றன. தமிழகத்தில் மணிக்கொடி காலம் உள்ளது போல மலேசியாவில் கதைவகுப்பு காலம் 18.8.51 இல் தொடங்கப்பட்டது. கதை வகுப்பு, அந்த மண்ணின் சிறுகதை இலக்கியத்தின் திருப்புமுனையாகக் கொள்ளப்படு கின்றது. இந்தக் கால்கோளிடலின் பின் பல உத்திகள், முயற்சிகள், ஆக்கப்பணிகள் மலேசிய இலக்கியத்தில் பரிசோதிக்கப்பட்டுள்ளன. ஆயினும் மலாய 1957 ஆகஸ்ட் 31 இல் சுதந்திரம் அடைந்த பின்புதான் மலேசிய மண்ணின் மணம் கமழும் தனித்துவமான படைப்பிலக்கியங்கள் வீறுடன் எழுந்தன என்று அறியமுடிகின்றது.

மலேசியாவில் தமிழ் இலக்கியவாதிகள் அவ்வப்போது தோன்றி, தமிழ் மக்களிடையே தமிழுணர்வையும் இன உணர்வையும் வளர்த்து வந்திருக்கிறார்கள். இன்றும் மலேசிய மக்கள் தமிழகத்தின் இலக்கியங்களைப் போற்றி வருவதையும், ஈழத்துத் தமிழிலக்கியங்கள் பற்றி ஆர்வத்துடன் அளவளாவி வருவதையும் நேரில் அறிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு அடிக்கடி ஏற்பட்டதுண்டு. பல்கலைக்கழக மட்டத்தில் கூட தமிழக இலக்கியங்களுக்கு இணையாக ஈழத்துத் தமிழ் இலக்கியங்களையும் வைத்துக் கற்பிக்கும் போக்கு அங்கு காணப்படுகின்றது. உலகளாவிய மாநாடுகளைக் கொண்டாடுவதில் மலேசியத் தமிழர்களுக்கு அதிக ஈடுபாடு உண்டு. ஏதாவது ஒரு புதுமை என்றால் அது மலேசிய மண்ணில்தான் நிகழ்கின்றது என்று உலகம் கூற வேண்டும் என்ற தோற்றத்தை ஏற்படுத்தும் வகையில் முதல் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு, முதல் உலகத் தமிழ்ப் பண்பாட்டு விழா, முதல் உலகத் திருக்குறள் மாநாடு, உலகத் தமிழர் மாநாடு, உலகத் தமிழாசிரியர் மாநாடு, சித்தர் மாநாடு, உலகத் தமிழ் எழுத்தாளர் தினம் என உலகளாவிய நிலையில் சிந்திப்பதற்கு, சந்திப்பதற்கு செயல்படுத்துவதற்கு முதல் கால்கோள் விழாவை மலேசிய மண்ணில் மலேசியத் தமிழர்கள்தான் செய்கின்றார்கள் என்பதை வரலாறு மறக்கப்போவதில்லை. இப்படி எண்ணிலங்காத மாநாடு களை வைத்து அண்டை நாடுகளிலுள்ள தமது தமிழ்ச் சகோதரர்களை வரவேற்று உபசரித்து அனுப்பி வைக்கும் மலேசியத் தமிழர்களுக்கு அவர்களது அயலவர்களான இந்தியத் தமிழரோ, ஈழத் தமிழரோ என்ன கைம்மாறைச் செய்திருக் கின்றோம் என்று சிந்தித்தால் வேதனைதான் மிஞ்சும்.

குறைந்தபட்சம் மலேசியத் தமிழ் இலக்கியத்தை, அங்கு நூற்றாண்டுக்கும் மேலாக இலக்கிய யாகம் நடத்திவரும் இலக்கிய வாதிகளைப் பற்றி அறிந்து கொள்ளவாவது முயன்றிருக்கிறோமா என்றால் இல்லை என்ற பதிலே பொதுவாக எம்மிடமிருந்து வரும்.

இந்த நிலமைக்கு மலேசியப் படைப்பாளிகளும் ஓரளவு பொறுப்பேற்க வேண்டும். தமது மண்ணின் இலக்கியத்தை உலக அரங்கில் எடுத்துச் செல்லும் வித்தை பற்றி அவர்கள் அக்கறை கொள்ளாதிருப்பது ஒரு காரணமாகும். அளவுக்கு அதிகமாகத் தமிழகத்தையே தமது இலக்கிய வளர்ச்சிக்காக இன்றும் நம்பியிருப்பதும், தமிழக ஜாம்பவான்களின் கைகளால் குட்டுப் படுவதைக் கூட பாக்கியமாகக் கருதிச் சிலர் செயற்படுவதும் இந்நிலையை மேலும் மோசமடையச் செய்கின்றது.

இந்நிலையில் தமிழ் இலக்கியம் என்றால் தமிழ்நாட்டு இலக்கியம் மட்டும் அல்ல அது உலகத் தமிழர்களுக்கும் பொதுவான இலக்கியம் என்ற விழிப்புணர்வு சாடைமாடையாக அங்கு இளந் தலைமுறையினரிடையே உருவாகி வருவதையும் கண்டுகொள்ள முடிகின்றது. தமிழ்நாட்டு மாயையிலிருந்து மலேசிய இலக்கியம் உலகத் தமிழர்களை நோக்கி எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்ற சிந்தனையுடன் வீறுடன் புறப்பட்டிருக்கின்றது ஒரு மலேசிய தமிழ் இளைஞர் அணி. கடந்த பெப்ரவரி 2006இல் நவீன இலக்கியத்தை நோக்கி காதல் என்ற சஞ்சிகையை இவர்கள் மாத இதழாகக் கொண்டு வந்தார்கள். மலேசிய பாரம்பரிய தமிழகச் சார்பிலக்கியச் சஞ்சிகையிலிருந்து விலகி, முற்றிலும் வித்தியாசமானதொரு புதிய தளத்தில் நவீனத்துவ இலக்கிய உச்சங்களை எட்டும் ஆர்வத்துடன் புரட்சிகரமான நவீன இலக்கியக் கருத்துக்களுடனும், ஆரோக்கியமானதும் சுதந்திரமானதுமான இலக்கியச் சர்ச்சைகளுக்கு மேடை அமைத்துக் கொடுத்தும் மலர்ந்து மணம் பரப்பிய இச் சிற்றிலக்கிய ஏட்டின் பின்புலத்தில் முனைவர் பெரு.அ. தமிழ்மணி, நிர்மலா பெருமாள், யுவராஜன் போன்றோர் வழிநடத்த மணிமொழி, ம.நவீன், ப.அ.சிவம் போன்ற மலேசிய இளைஞர்களும் உற்சாகத்துடன் செயற்பட்டார்கள். நவம்பர் 2006 இல் 10 இதழ்களுடன் காதல் கைகூடாது நின்று போய் விட்டது. பொருளாதாரக் காரணியே சிற்றிலக்கிய ஏடுகளின் முதல் எதிரி என்பதும் பொய்த்து விடவில்லை.

"சுமார் 500 தமிழ்ப்பள்ளிகளில் ஆறாம் வகுப்பு வரையில் மட்டுமே தமிழ்கற்று சமூகத்தின் கீழ்த் தட்டு மற்றும் மத்தியதரவர்க்கத்து மக்களை நம்பித்தான் இங்கே தமிழ்ப்பத்திரிக்கை உலகம் இயங்க முடியும். தமிழ்ப்பள்ளி ஆசிரியர்கள், தமிழ் கற்ற கல்லூரி மாணவர்கள், பல்கலைக்கழக முன்னாள், இந்நாள் தமிழ் மாணவர்கள், பேராசிரியர்கள் என்ற இந்த அறிவுஜீவிகள், தமிழ் சமூக அரசியல், பொருளாதார, கல்வி இலக்கிய, பண்பாட்டுத் தளங்களில் எந்தவிதமான தீவிர ஈடுபாடோ, செயல்பாடோ அற்ற காலகட்டம் இது" என்று குறிப்பிடும் மலேசியத் தமிழறிஞரும் படைப்பாளியுமான மா.சண்முகசிவாவின் கூற்று ஆழ்ந்து கவனிக்கத் தக்கது.

இன்று ம.நவீன்,பா.அ.சிவம்,சந்துரு, ஆகியோர் சாம்பலிலிருந்து புறப்பட்ட பீனிக்ஸ் பறவைகளாக, மீண்டும் தமது முயற்சியில் மனம் தளராது இம்மாதம் முதல் வல்லினம் என்ற பெயரில் மற்றொரு சிற்றிலக்கிய ஏட்டினைக் காலாண்டிதழாகக் கொண்டு வந்துள்ளார்கள். தமிழகத்திலிருந்து மனுஷ்யபுத்திரனின் உயிர்மைப் பதிப்பகம் இவர்களது சஞ்சிகையை அச்சிட்டு விநியோகிக்கும் பொறுப்பை ஏற்றிருக்கின்றது என்றும் அறிய முடிகின்றது. வல்லினம் சிற்றிலக்கிய ஏட்டின்ஆலோசகர்களாகமா. சண்முகசிவா, சீ.முத்துசாமி,கோ.முனியாண்டி போன்ற மலேசிய முன்னோடித்தமிழ்எழுத்தாளர்கள் மனோதைரியத்தை நிச்சயம் ஊட்டக்கூடும்.

வல்லினம் இதழின் ஜுன் 2007க்குரிய முதலாவது இதழிலேயே அச்சிட்டுச் செலவைச் சிக்கனமாகக் கையாண்டிருப்பதைப் பார்த்துப் புரிந்து கொள்ள முடிகின்றது. முன்னைய காதல் சஞ்சிகையில் கற்ற பாடமாக இது இருக்கலாம். காதல் சஞ்சிகையில் தம் கைவண்ணத்தைக் காட்டியது போலவே இங்கும் அழகியல் அம்சம் பொருந்திய திட்டமிட்ட பக்க வடிவமைப்பில் அதிக அக்கறையினைச் செலுத்தியுள்ளார்கள்.

சஞ்சிகையின் உள்ளே பிரிமாறப் பட்டிருக்கும் இலக்கிய விடயங்களை சுருக்கமாகக் கூறுகின்றேன். மலேசிய அறிவில் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராகவும், இணைப் பேராசிரிய ராகவும் இருந்த தமிழறிஞர், மலேசிய எழுத்தாளர் ரெ.கார்த்திகேசு அவர்களும், மலேசியத் தமிழ் நெறிக்கழகத்தின் தலைவராகவும், பண்டார்பாரு செந்தூல் இடைநிலைப் பள்ளியில் உளவளத் துணை ஆசிரியராகவும் பணியாற்றும் இரா.திருமாவளவன் ஆகியோரின் இரண்டு நேர்காணல்கள் இடம் பெற்றுள்ளன. இவ்விதழின் சிறுகதைகளை சீ.முத்துச்சாமி, கோ.முனியாண்டி, மஹாத்மன், ம.நவீன் ஆகியோர் எழுதியுள்ளனர். இலக்கிய ஆய்வுக் கட்டுரைகளை லண்டனிலி ருந்து நூலகவியலாளர் என்.செல்வராஜா, மலேசியாவிலிருந்து ந.மகேஸ்வரி, யுவராஜன், ப.மணி ஜெகதீசன், கோ.புண்ணியவான் ஆகியோர் வழங்கியுள்ளனர். பா.அ.சிவம், அருண், தோழி, கருணாகரன், ஏ.தேவராஜன், சந்துரு ஆகியோருடன் சுவிஸ்சிலிருந்து நளாயினி தாமரைச் செல்வனும் கவிதைகளை இவ்விதழுக்கு வழங்கியுள்ளனர்.

இளம் பள்ளி ஆசிரியரான ம.நவீன், வல்லினத்தின் பிரதம ஆசிரியராகவும், பா.அ.சிவம் துணை ஆசிரியராகவும் இயங்கியுள்ளனர்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் ஆதர வினை நாடி உலகளாவிய ரீதியில் தனது பறத் தலை சுதந்திரமாக மேற்கொள்ளத் துடிக்கும் வல்லினம் என்ற குருவிக் குஞ்சு அதன் கூட்டுக் குள்ளிருந்து வெளியே வந்து சிறகடிக்கின்றது. மலேசியப் படைப்பாளிகளையும் தம்முடன் இணைத்து உலகத் தமிழ் இலக்கியவானில் பய ணிக்க விரும்பும் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்துத் தமிழ் உறவுகள் அதன் சுதந்திரமானதும் பாது காப்பானதுமான சிறகசைப்பிற்கு ஊக்கத்தை வழங்க முன்வர வேண்டும். படைப்பாளிகள் தமது ஆக்கங்களை மட்டும் வல்லினத்துக்கு அனுப்பி வைப்பதுடன் தமது கடமை முடிந்து விட்டதாகக் கருதாமல் சிறிய பணத்தொகையும் சேர்த்து அவ்விதழின் வளர்ச்சிக்கு உரமாக வழங் குவதற்கு முன்வர வேண்டும். ஆரோக்கியமான தும், சிந்தனையைத் தூண்டுவதுமான படைப்பு களையும் தன்னகத்தே கொண்டு வெளி வந்து காட்டியுள்ள இச்சிற்றிலக்கிய ஏட்டின் வளர்ச்சி ஓரளவு எமது கைகளிலும்தான்உள்ளது. ஈழத்து மலேசிய இலக்கிய உறவினைப் பேண விரும்பும் படைப்பாளிகளுக்கு வல்லினத்தின் தொடர்பிற் கான தகவல்களைக் கீழே தந்துள்ளேன்.

**தொடர்புகளுக்கு:**M.Naveen/ Kaanal Publication, 16,Jalan 7/5, Taman Sri Gombak, 68100, Batu Caves, Selangor, Malaysia.**மின்அஞ்சல்முகவரி** : an_vin82@yahoo.com.sg அல்லது vallinamm@yahoo.com.my

## காற்றுவெளியில் கிடைக்கும் கவிதை நூல்கள்:

**நீர்வளையங்கள் - சண்முகம் சிவலிங்கம்.**
**நீலாவாணன் கவிதைகள் - நீலாவாணன்.**
**ஈழத்துக் கவிதைக்கனிகள் - சிலோன் விஜயேந்திரன்.**
**இரட்டைத்தாயின் ஒற்றைக்குழந்தை - கலைமகள் ஹிதாலா றிஸ்வி, மஸிதா புன்னியாமின்.**
**யுத்த காண்டம் - முல்லை அமுதன்.**
**கடைசிச் சொட்டு உசிரில் - எஸ்.நஸீம்.**
**செட்டை கழற்றிய நாங்கள் - ரவி.**
**பாம்பு நரம்பு மனிதன் - சோலைக்கிளி.**
**பணிதல் மறந்தவர் - சி.சிவசேகரம்.**
**வானலையில் எங்கள் கவிதைகள் - தொகுப்பு - வண்ணை தெய்வம்.**
**பண்டாரவன்னியன் காவியம் - ஜின்னாஹ ஷரிபுத்தின்.**
**உயிர்த்தெழும் காலத்திற்காக - சு.வில்வரத்தினம்.**
**இசைக்குள் அடங்காத பாடல்கள் - முல்லைஅமுதன்.**

## ஏன் வழியனுப்ப வந்தாய்...?

தொட்டுவிடும் தூரத்தில் தான் நாங்கள்.

மௌனமாய் கரைகிறது நொடிகள்.

நகரும் அவசரத்தில் ரயிலும் நானும்.

கட்டாய இறுக்கத்தில் துயரும் நீயும்.

பரிமாறத் தயங்கும்
திறனற்ற பார்வைகளை
பரஸ்பரம் மறைத்து.

எங்கோ பார்த்தவாறு
விடைபெற எத்தனிக்கிறாய்

அன்பின் அத்தனை செறிவும்
கண்ணீருடன் கலந்து
விழியோரம் கணக்கிறது.

எண்ணங்கள் உந்தித் தள்ளும்
ஒவ்வொரு வார்த்தைகளும்
உள்ளுக்குள் தேங்கி
மூர்ச்சையாகிப் போகிறது...

தடதடத்து... தடதடத்து...
ரயில் உன்னைக் கடக்க,
உன் கரங்களை
இறுக்கிப் பற்றிக் கொள்கிறேன்
குழந்தையாகித் தேம்புகிறேன்.

விரல்கள் விலக்காது கூடவே நடந்தபடி
வயது மறந்து விம்மி வேர்க்கிறாய்.

கொஞ்சமாய் வேகம் அதிகரித்து...
அதிகரித்து... அதிகரித்து...
உன் ஐந்து விரல்களும்
இழுபட்டு விடுபடுகிறது.

என் நெஞ்சுக்குள் ஏதோ ஒன்று
திரண்டு வழிந்து இல்லாமல் போவதாய்...

கொண்டை ஊசி வளைவில் தூரமாய்...
மீண்டும் உன் முகதரிசனம்.

தூணின் துணையுடன்
சோர்வாய் தொய்கிறாய்.

அங்கத்தை துளைத்துத் துளைத்து
யாரோ சுடுவது போல் எனக்குள்
எங்கெங்கெல்லாமோ வலிக்கிறது...

ஓ... என்னைப் பெற்ற உன்னதனே
ஏன் என்னை வழியனுப்ப வந்தாய்...?

**- பிரமிளா செல்வராஜா**
ஊவாகட்டவளை
ஹாலி-எல

## மனிதா சிந்திப்பாயா?

நாற்சார வீடுமங்கே நடுவிருக்க
நாலுபக்க வேலிகளும் முருங்கை காய்க்க
காற்றோடு சலசலத்து தென்னை வாழை
காலையிலே சாமிக்கென மரங்கள் பூக்க
தூற்றான துரவுகளும் சுரத்து முட்ட
சுற்றிவந்தே நீர் பருகும் ஆடும் மாடும்
நேற்றோடு முடிந்திடுத்து அவளின் வாழ்வில்
நெஞ்சமின்று கலங்குகிறாள் நினைவை எண்ணி.

பிள்ளை மனம் நோகுமென்று விமானம் ஏறி
பிறந்த மண்ணைப் பிரிந்துவந்த அவளின் வாழ்வும்
கொள்ளைபோயோ வருடமது இரண்டாய் நீள
கொடுத்த அந்த சோசல் பணம் எதுவோ ஆக
பிள்ளைபெறு பார்க்க வந்து வருடம் இரண்டும்
பெரும்பகுதி அவள் உழைப்பும் சமையல் கட்டாய்
வெள்ளையென நம்பி வந்தாள் கள்ளும் வெள்ளை
வேதனையில் குமுறுகிறாள் மகனாய்ப் போச்சே.

போகவிடு என்றவளும் பல நாள் கேட்க
பொறுத்திரணை பேரனுக்கு ஆண்டு இரண்டும்
தாகமுடன் களைப்படைந்த தாயின் சோகம்
தனம் தேடும் தவிப்புடனே தனயன் ஏக்கம்
வேகமுடன் முடிவெடுக்கத் திறன் இருந்தும்
வேற்றிடத்தில் ஏதறிவாள் ஏதைச் செய்ய
சோகமுடன் வாழ்வுமது கழிந்தே போக
சொற்ப தினம் காத்திருக்காள் ஊர் போய்ச்சேர.

கேடுகெட்ட மானுடனே கேளும் கொஞ்சம்
கேள்வியது உன் வாழ்வோ தினமும் இங்கே
பாடுபட்டு வளர்த்து விட்ட பாசத்துக்கா
பணம் தேட பக்குவமாய் அதனைக் கொண்டாய்
கூடுகட்டி முட்டையிட்ட குற்றம் என்றால் - நீ
கூண்டோடு இங்கிருக்க ஏதோ காதை
நாடுவிட்டு நாடு வந்தும் உன்தன் மூளை
நல்லவற்றை நினைக்குதில்லை ஏனோ தானோ.

**- த.சு.மணியம்**

## வாழ்க்கை வலிக்கிறது...

*காத்திருப்புகளால்*
*கனக்கும் அடிமனம்.*

*பல நேரங்களில்*
*பகல் கனவோடு*
*பரிதவிக்கும் விழிகள்.*

*நிம்மதியை நிர்ணயிக்கிறது*
*நிர்ப்பந்தமாய் நுழைந்த*
*நிலையற்ற வாழ்க்கை.*

*இதயம் சிந்தும் நீரில்*
*இளமை புதைந்து போகிறது.*

*வேலை தேடியே*
*விக்கித்துப் போன - மனம்*
*விளையாடவும் மறுக்கிறது*
*வீடென்றாலோ வெறுக்கிறது.*

*தண்டச் சோறென*
*தன்மானம் கொள்கிறது - இது*
*தருணம் அல்லவென*
*தாய் மனம் சொல்கிறது.*

*சிபாரிசுகளும், சில்லறைகளும்*
*சிறப்பிடம் பெறுகையில்*
*தகைமையும் தகுதியும்*
*தற்கொலைக்கு தள்ளப்படுகிறது.*

*அன்னை சுமக்கும் ஆசையையும்*
*அப்பன் சுமக்கும் மூடையையும்*
*இரக்கத் துடிக்கும் இதயங்களுக்கு*
*இப்போதே வலிக்கிறது வாழ்க்கை.*

- இராமன்.ஏ.சதீஷ்,
*101/பி,கிளண்டில்ட் எஸ்டேட்,*
*மஸ்கெலியா, இலங்கை.*

## மலரத் துடிக்கும் ஒரு மலர்

அவள் நடையிலோ
பொன்மேகம்
ஊர்கோலம் போகிறதே!

அவள் கண்ணோடு கண்கள்
எனை வேதனைப்படுத்தும்
தோரணை காட்டுதே!

தோளோடு தோள் சாயும்
தோகை மயிலா இவள்?
இவள் அழகோ
எனை சிறை வைக்கிறதே!
இவள் நிழலோ
எனை தொழவைக்கிறதே!
அவள் ஆடைகளோ
அவளிடம் கை ஏந்தி விடைகாண
விடுதலை கேட்கிறதே!

அவளால் என் இரவுகளும்
பகலாகி பாழாகிறதே!
இவள்
எனைக் கொல்லாமல் கொல்லும்
செந்தாமரை மோகினியா? - அவள்
இரண்டு கண்களும்
சண்டையிடும் கொண்டைமீன்களா?

அவள் உடலில்
பருவகாலம் உருவாகி முட்டிமோதி
இவளிடம் ரகசியமாக வெளியேற
விடுதலை கேட்கிறதே?
குயிலோடு குயிலான
அவள் குரலின் - இனிமை
கொஞ்சமாக எனை
கொஞ்சி விளையாட
கெஞ்சிக் கேட்கிறதே!

அவளோ மலரும் மலர்கள் நடுவில்
மலர்ந்தும் மலராத மலராய்
மலர்வதற்காய் காத்திருக்கும்
ஒரு அழகு மலர்த் தோட்டம்.

ரோஜா ஒன்று
என் கண் முன்னே
பெண்ணாக மலர்ந்து
தேவதை என்ற பெயரோடு - மண்ணிலே
விண்மீனாகக் கண்டேனே!

அவளைக் கண்ட அந்தக் கணமோ
என் மனமோ வேர்க்கிறதே
அவள் பெண்தானோ? - இல்லை
பெண்ணான ஓவியமா?

இவள் கண் பார்வையில்
காந்தம் ஈர்க்கிறதே!
பார்க்காதபோது எனை
வேட்கை கொள்ளத்தூண்டுகிறதே!

இலையோடு கிளையாக
கிள்ளை மொழி பேசும்
கிளி அவள்!

முல்லைச் சிரிப்பு உதிர்க்கும்
துள்ளி ஓடும்
புள்ளி மானும் இவள்தானோ?
அவள் முகத்திலோ
எள்ளி நகையாடும் குறும்பு
புருவமோ இரு வில்லானதோ?

அரும்பான இரு விழிகளும்
அம்பாகி
விரும்பியே என்னுடன்
வம்பு செய்யத் துடிக்கிறதே!
அவள் கால்களோ
எதிரும் புதிருமாக
இடம்மாறி
தட்டு தடுமாறுகிறதே!

உன் நெஞ்சிலே
ஈரமில்லையா?
உன்னை நான்
அடைய வேண்டுமே
என் கால்களோ
கலகம் செய்கிறதே
அவளை நெருங்க நெருங்க

என் உணர்விலே
புது புது அர்த்தம் புரிந்து
சொல்ல வந்த சொல்லை
என் உள்ளம் பேசவில்லை
என் விழிகளிலே
ஏக்கத்தின் ஆதங்கம்.

உனை நெருங்கினேன்,
தலை நிமிர்ந்தேன்
என்னையே என்னால்
நம்ப முடியவில்லை
உன் எல்லை மீறி
அரங்கேறிய அதரங்கள்
எனை
பொய்யானவனாக்கி விட்டதே!

நீ கட்டுக் காவல் போட முடியாத
பட்டு ரோஜா
மலர்ந்தும் மலராமல்
மலரத்துடிக்கின்ற மலரே!

மலர்ந்தும் மலராத
மொட்டு விழத்துடிக்கின்ற
பட்டாம் பூச்சியா இவள்
இவளோ
இதழ் விரியத் துடிக்கும்
இளம் மொட்டு.

- **சித்ரா.சுப்பிரமணியய்யர்.**
நல்லூர், யாழ்ப்பாணம்.

# யாரடா?

முன்னர் இருந்தவர் யாரடா - புவி மூத்த குமரியைக் கேளடா!
பின்னர் அடைந்தவர் யாரடா - வங்கப் பேரலை வாடையைக் கேளடா!

சிற்றினம் பேரினம் ஆனதை - வந்து சேர்ந்த பெண்பாலரைக் கேளடா!
பெற்றதெல்லாம் நம் பழமைடா - இன்று பேரெதிர் ஆதல் புதுமைடா!

எம்மில் இருந்து வந்தெம்மையே - தின்று ஏப்பம் விடுவது என்னடா?
தம்மை மறைத்திட பொய்யையே - என்றும் தாவிப்பிடிப்பதும் என்னடா?

ஆட்டுடன் மாட்டைக்கடித்துமே - இன்று ஆளைக் கடிப்பதும் என்னடா?
வீட்டுள் நுழைவதும், பா்யிலே - சும்மா வீழ்ந்து படுப்பதும் என்னடா?

நல்லோர் சிலையை இரவிலே - பிற நாட்டுள் திணிப்பது என்னடா?
பல்லினத்தார் வாழும் நாட்டிலே - ஒரு பக்கமே பார்த்திடல் என்னடா?

அடக்கும் முயற்சிகள் பாரடா - புவி ஆயிரம் சொல்லியும் என்னடா?
ஒடுக்கி அழிக்கும் முயற்சியே - அவர் உள்ளத்தில் உள்ள குறியடா!

பெறுமதியானதுயிரடா - நகை பேசுப் பேசிப் பறித்தாரடா!
பொறுமைக்கும் எல்லையுடாமடா - தோற்றும் போரினுக்கே அழைப்பாரடா!

ஆடுற மாடெனில் ஆடடா - வந்து அணைந்திடுமாயின் அணையடா!
பாடுற மாடெனில் பாடடா - இன்றேல் பாலைக் கறக்கும் பொறுப்படா!

# நல்லதே!

ஒருமைப்பாடு காக்க நீ ஒன்றுபட்டு வாவண்டி!
எருமைபோல நிக்கிறியாடி - ஒன்றுமே, ஏறுதில்லையோடி காதிலே?

அடுப்படிக்குள் என்னையே அடக்கி வச்சுக்கொண்டுமே
நடப்புக் காட்ட வருகிறோயா நீ - ஆருக்கோ, நாடகங்கள் போடப்போகிறாய்?

பூவும் மணமும் போல நாம் புவியில் வாழ்ந்து காட்டுவோம்!
சாவரைக்கும் உந்தனோடுதான் - வாழ்ந்துமே, சமத்துவத்தைக் காட்டப்போறன்டி!

கடந்தகாலம் முழுவதும் கல்லு நெஞ்சுக்காரனாய்
நடந்ததெல்லாம் நான்மறப்பேனா - இனியுமே, நம்பி நம்பி ஆற்றில் வீழ்வேனோ?

இன்று புதிய மனிதானாய் இருக்குமென்னைப் பாரடி!
அன்று போன கனவு யாவையும் - மறந்து நீ, ஆசையோடு சேர்ந்து பாரடி!

போதும் வாயும் வார்த்தையும் பொறுமை எல்லை தாண்டுதே!
ஏதுவழியும் இணைப்புக்கில்லையே - ஆதலால், இருவருக்கும் பிரிவு நல்லதே!

- தாமரைத் தீவான்.

# நெஞ்சத்து நெருப்பு

பூமிப்பந்தின் கீழ்ப்பரப்பில்
கடல் சூழ்ந்த நிலப்பரப்பில்
மாங்காய் வடிவத்தில்
ஒரு அழகான தேசம்!

இனவாதத் தீயால்
ஆண்டுகள் பல
எரிந்து கொண்டே இன்றும்...

அத்தேசம் வாழ் மக்களோ
குருதிச் சேற்றில்
முகம் குப்புற விழுந்து
மரண ஓலம் ஒலிக்கிறார்கள்...

ஆனால்... ஆனால்...
அரசியல்வாதிகளோ
அதை தேசிய கீதமாகக் கேட்டு மகிழ்ந்தபடி
தேசியக்கொடியை ஏலத்தில் விற்று
கட்சிக் கொடிக்கு சாயம் பூசுகிறார்கள்.

பதவிக்காக
இனவாதத்தீயை மூட்டுகிறார்கள்...
அரசியல் வங்குரோத்துத்தனத்தால்
பதவியில் ஏற்பட்ட மாய்வெறியால்
கொள்கைகளற்ற அரசியல் குண்டர்களால்
கட்சிக் கொள்கை ஆக்கப்பட்ட
இனவாதம் இன்று அரசோச்சும்
நாடாய் இத்தேசம்.

மாறிமாறி வெற்றி வேண்டுமென்றால்
பதவி வேண்டுமென்றால்
வெட்டிவிலை பேசு
தமிழர் தலைகளை என்று
பிரகடனப்படுத்தப்பட்ட
சித்தார்த்தர் தேசமாய்...

அரசியல் வேச வாதிகளே!
உங்களை நீங்கள்
திருத்திக்கொள்ளுங்கள்.

மீண்டும் மீண்டும் மீண்டும்
துருப்பிடித்த துப்பாக்கியை
தூசு தட்டச் செய்யாதீர்கள்.

தொலைத்துவிட்ட தோட்டாக்களை
தேடியெடுக்க வைக்காதீர்கள்.
எடுக்கப்பட்ட கன்னிவெடிகளை
மீண்டும் புதைக்கச் செய்யாதீர்கள்.

உங்களால் புதைக்கப்பட்ட
புத்தனின் போதனைப் புத்தகத்தை
தேடி எடுங்கள்.

மதத்தால் வெறிகொண்டு
அழிவைத்தேடிய அயல் தேசங்களை
புத்திக்கு பாடமாய் எடுங்கள்.

விக்ரோறியா நந்தவனத்து
பூக்களெல்லாம் அழுகின்றனவாம்
தேன் குடிக்கும் வண்டுகளைக்
காணவில்லை என்று.

இனவாதம் கலந்த பூக்களென்று
வண்டுகள் தேனை
வெறுத்து விட்டனவாம்.

மனிதம் பிறந்தது
ஒற்றுமையாய் வாழ்வதற்கு.

ஒன்றிணைந்து
சாதனை செய்வதற்கு.

மேற்குலகில்
நாயின்மடியில் அமைதியாய்
படுத்து உறங்குதே பூனைகள்.

ஆறறிவு மனிதா
நீ ஏன் இன்னும் ஐந்துக்குள் நிற்கிறாய்.

உன் ஆறுக்கு வேலைகொடு
பகுத்தறிவை பயன்படுத்து.

இனவாத அரசியலை எரித்துவிடு.

மக்கள் சேவையை அரசியலாக்கு.

மனிதர்களை
மனிதர்களாய் எண்ணி வாழவிடுங்கள்
இல்லையென்றால்!
இல்லையென்றால்
இல்லையென்றால்!!!

– வேலணையூர் பொன்னண்ணா.
டென்மார்க்.

# காற்றுவெளி கவிதைச் சிறப்பிதழ்
# கவிதைக்குள் ஒரு கொண்டாட்டம்

**- வேலணையூர் பொன்னண்ணா,** டென்மார்க்.

**ம**திப்புக்குரிய காற்றுவெளி ஆசிரியர் ஷோபாவை துணையாகக் கொண்டு அன்புத்தம்பி முல்லை அமுதனின் நெறியாட்கையை தள மாக்கி, நினைத்தபோது வெளிவரும் சஞ்சிகையின் யூலை மாத இதழ் கிடைத்தது. படித்தேன். அதில் பல கவிதைகள் என கருத்துக்குத் தீனி போட்டன எனலாம். அவைகளில் ஒருசில கவிதைகளின் கருத்து மிக மிக ஆழமாக என கரத்துக்கு உரம் சேர்த்தன எனலாம். அவற்றுள் கவிதாயினி சிவரமணியின் 'முனைப்பு' என்ற கவிதை ஒரு நிகழ்கால சமகால நிகழ்வினை எனக்குப் படம் பிடித்துக் காட்டியது எனது சிந்தனைக்கு. தமிழர் வாழ்க்கையில் இன்று ஏற்பட்டுள்ள அவல வாழ்வின் நிகழ்கால நிகழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. நான் அறிந்த தெரிந்த வகையில் இந்த கவிதைக்குள் நடமாடும் அந்த இளம் தமிழச்சியைப் போல பல நூறு தங்கைமார் இப்படி வேத னைப்பட்டு இரக்கமற்ற வேட்டை நாய்களின் வெறியாட்டத் துக்கு இரையாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தன் வேதனை கொண்ட இதயத்துடிப்போடு கவி வரிகளாக்கி உள்ளார். அந்த வரிகளில் சில,

**என்னை**
**மேகத்துக்குள்ளும்**
**மண்ணுக்குள்ளும்**
**மறைக்க எண்ணிய வேளையில்**
**வெளிச்சம் போட்டுப் பார்த்தனர்.**
**அவர்களின் குரோதம் நிறைந்த பார்வையும்**
**வஞ்சகம் நிறைந்த சிரிப்பும்**
**என்னைச் சுட்டெரித்தன**

என்கிறார் கவிதாயினி.

இந்த வரிகளைப் படிக்கும் எந்த வாசகரும் அந்த நிகழ்வின் வேதனையை நேரில் சந்தித்த ஒரு தங்கையின் நேரடி வாக்குமூலமாக மனக்கண்முன் வந்து விழுந்தால் அதுவே கவிதையின் சிறப்பாகும். அதை அடுத்து வரிகளில் கவிஞர் வரிபோடுகின்றார்,

என் வேதனை கண்டு, ரசித்தனர் அவர்கள் என்றைக்குமாய் என் தலைகுனிந்து போனதாய் கனவு கண்டனர்... ஆனால் அது நடக்காது நான் பட்ட வேதனையை என் இனத்தவள் பட்ட வேதனையை அவர் களுக்கும் ஏற்படுத்தி நாங்கள் ரசிக்க வேண்டும் என தன் நெஞ்சுக்குள் பெரும் தீ வளர்க்கும் இலட்சியவரிகளாய்த் தொடர்கின்றாள். இதுவே இன்று ஈழத்தில் நடக்கின்றது என அவரின் கருவோட்டத்தில் கவிதை தொடர்கிறது.

காற்றுவெளியின் மூலம் தம்பி கவிஞர் முல்லை அமுதன் அவர்கள் நல்ல தமிழ்ப்பணி செய்கின்றார். கவிதைகளை படிப்பதைவிட அதில் உள்ள கருவுக்கு விமர்சனம் செய்து அந்த விமர்சனத்தால் அந்தக் கவிதை வரிகளின் சொந்தக்காரருக்கு அவர் பணிக்கு நம்பிக்கை ஊட்டி வளர்த்தெடுக்க முயற்சிக்கின்றார். நல்ல முயற்சி இது. இந்தப் பணிக்கு இலக்கியத் துறைக்குள் கால்பதித்த அனைவரும் கரம் கொடுக்கும் பங்கு நிறையவே உள்ளது. புலம்பெயர் மண்ணில் தமிழ் இலக்கியத்தை வளர்ப்பதன் நிலைப்பாடு தீ மிதிப்பின் செயலாகும் என்பதை நன் குணர்ந்து செய்ய முடியாது விட்டாலும், செய்கின்ற வருக்கு கரங்கொடுப்பதும் ஒரு கட்டாய கடமை எனபதை உணர்வது மிகவும் சிறந்ததே.

❑❑❑

# கைகள் விற்பனைக்கு...

## நஜ்மல் ஹசன் ரிஸ்வி

தமிழில்: செல்வ காமராசன்

கடையில் வெள்ளை, கறுப்பு, மாநிறம் என்று பல வண்ணங்களில் கைகள் குவிக்கப்பட்டு இருந்தன. சில மெல்லிய அழகிய நீண்ட விரல்களுடன், சில தடித்த விரல்களுடன், சில கூரான நகங்களுடன், அருவெறுப்புடன் கிடந்தன. பல கைகள் அங்கங்கே வீங்கியும் சிறிய கொப்புளங்களுடனும், கயிறு போன்ற முறுக்கேறிய நரம்புகளுடனும் காணப்பட்டன. ஒரு சில கைகள் மட்டுமே மாசுமருவற்று இருந்தன. பல கைகள் ஒயரில் தொங்கியபடி இருந்தன. அவற்றின் ஓய்வறியா விரல்கள் குளிர்காற்றில் அமைதி அடைந்து கிடந்தன. சில கரங்கள், மர மேசையைத் தாண்டி நெளிந்து வளைந்து தப்ப முயற்சித்தன. விழிப்புடன் இருந்த கடை உதவியாளன் அவற்றை ஒரு இடுக்கியில் பிடித்து கறுப்புக் குடையில் போட்டான். பல அழகிய கரங்கள் வெல்வெட் துணிமீது பளிச்சென காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. விற்பனையை பெருமிதப் படுத்தும் விதமாக ஒரு வலிமையான கறுப்புக்கரம் பளிச்சென்ற ஒரு "ஷோகேசில்" காட்சிக்கு வைக்கப் பட்டிருந்தது. இவை அனைத்தையும் வாய்பிளந்து பார்த்துக் கொண்டிருந்தேன் நான். ஆனால் என்னோடு வந்த கதை தேடி அலைந்து கொண்டிருக்கும் பத்திரிக்கைத் துறை நண்பர், "இந்தக் கரத்தின்மீது மட்டுமே கவனம் செலுத்து... என்ன வலிமையான கரம்?" என்று வியந்து கூறினார்.

இதைக் கேட்ட கடைக்காரர் சிரித்தபடி, "இருக்காதா பின்ன! இது ஒரு கறுப்பு ராட்சசனுடையது". என்றார்.

அந்த ராட்சசனின் கரத்துக்குப் பக்கத்தில் வெள்ளிப் பெட்டியில் ஒரு அழகிய கரம் ஒளிர்ந்தபடி இருந்தது. அதற்குக் கீழே இருந்த மரப்பலகையில் "எந்தச் சிக்கலையும் நொடிப் பொழுதில் தீர்த்து விடக் கூடிய அரிய கரம் இது" என எழுதப்பட்டிருந்தது.

"இது யாருடைய கரம்?" என நான் கேட்டேன்.

"ஹாதீம் தாயுடையது" என்றார் கடைக்காரர்.

பெரிய ஷோகேஸ் பல அறைகளாகப் பிரிக்கப் பட்டு பல்வேறு கரங்கள் குறிப்புகளுடன் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அவைகள் மலைகளிலிருந்தும், சுரங்கங்களிலிருந்தும், உயரமான இடத்திலிருந்தும் தேனையும் பாலையும் கொண்டு வந்த வலிமையான கரங்கள். ஒரே தொடுதலில் கடல் தண்ணீரை இனிப்பாகவும், குப்பையைத் தங்கமாக மாற்றுகிற ரசாயன வித்தை தெரிந்தவை.

"இந்தக் கரங்கள் பேசாதவை, இவற்றால் பேச முடியாது. செயல்கள்தாம் தெரியும்" என்றார் கடைக்காரர்.

"அற்புதமாக இருக்கே! என்னால இத நம்பமுடியலியே" என்றார் என் நண்பர்.

"இதல ஆச்சரியப்பட என்ன இருக்கு? என்ன மாதிரி ஆசப்பட்ட பல பேர் தங்கள் கையை வித்திருக் காங்க. நான்கூட என் கையை விக்கத்தான வந்திருக் கேன். இந்தக் கையெல்லாம் துருப் பிடிச்சிருச்சி. ஒன்னும் வேலையில்லாம வீட்டில கிடக்குது. நல்ல விலை கிடைக்கும் போது இதை விக்கறதுல என்ன தப்பு?" என்றேன் நான்.

"ஆக நீ கூட பணத்துக்காக உன்னுடைய கரும்பு மாதிரி இருக்கிற கையை விக்கப் போறியா... என்ன கொடுமை" என்று அங்கலாய்த்தார் என் நண்பர்.

அவருடைய கிண்டலைப் பொருட்படுத்தாத நான் அவரை விளக்குகளால் ஒளிரும் கடைக்குள் இழுத் தேன். கூட்டம் அலை மோதியது. ஒவ்வொரு கவுண்ட் டரிலும் வரிசை. அங்கங்கே விளம்பரப் பலகைகள் "உங்கள் கைகளை இங்கே வழங்குங்கள் பரிசோத னைக்கு... உங்கள் கைகள் நல்ல சொத்துக்கள்... அவற்றை விற்றுப் பணமாக்குங்கள்" என்று அறிவித்த படி இருந்தன. ஒரு ஆளுயர விளம்பரப்பலகை இப்படிக் கூறியபடி இருந்தது. "நீங்கள் வேலையற்று இருந்தாலோ, குறைவான சம்பளம் பெற்றாலோ அல்லது வாங்கும் ஊதியம் வாழ்க்கைக்குப் போதாது என்றாலோ கவலை வேண்டாம். நாங்கள் உடனடித் தீர்வு வைத்திருக்கிறோம். உங்கள் கைகளை எங்களுக் குத் தாருங்கள். வாழ்க்கையை அமைதியாய்க் கழியுங்கள். எங்களுடைய ஒரு கப்பல் வெளிநாடு களுக்கு கைகளைச் சுமந்து துறைமுகத்துக்குச் சென்று கொண்டிருக்கிறது. எங்களுடைய கப்பல்கள் புதிய புதிய நாடுகளுக்குச் செல்வத்துக்காக செல்கிறது. உங்கள் கைகளும் அதில் ஒன்றாகட்டும். நினைவிருக் கட்டும், இந்த உலகில் எங்கள் மூலம் செல்வம் சேருங்கள். நிம்மதியாக வாழ்நாளைக் கழியுங்கள்."

என் நண்பர் கூறினார், "இது ஒரு அற்புதமான கதை. இது ரொம்ப உணர்ச்சிமயமானது. சொல்றேன் கேட்டுக்கோ"

"உணர்ச்சியோ இல்லியோ அது உன்னோட. நான் இங்க என் கைகளை விக்க வந்திருக்கேன். என் அக்கம் பக்கத்து வீட்டுக்காரங்க வசதியா இருக்காங்க. அவங்க வீட்டு சுவத்துலகூட "லட்சுமி" தாண்டவமாடுது. என் வீட்டு வராண்டாவுல "தரித்திரம்" தூங்குது. என் சம் சாரம் கரிச்சுக் கொட்றா. உன் கைய மடியில வச்சிட்டு தண்டத்துக்குத் தாலாட்டு பாடிக்கிட்டிருன்னு சொல்றா... அக்கம்பக்கத்துக்காரங்க மாதிரி புத்திசாலி

யாயிருந்து தரித்திரத்தை துரத்துங்கறா. அவங்கள்லாம் அவங்க சம்சாரத்தை எப்படி வச்சிருக்காங்க பாருன்னு குத்திக் காட்றா" என்றேன் நான்.

என் நண்பன் வெறுப்போடு தலையாட்டினான்.

ஒரு வயதான பெண்மணி கூட்டத்தை நெருக்கியடித்து வரிசைக்குள் நுழைந்து நின்றாள். "எம் பையனோட கைகளைக் கொண்டாந்திருக்கேன் வாங்கிக்கிறீங்களா?" என்று அந்தக் கவுண்ட்டரில் கேட்டாள்.

"ஓ! தாராளமா! நாங்க எடுத்துக்கறோம். நாங்க கூடவே ஒரு கடிதம் தருவோம் அதை வச்சிக் கிட்டீங்கன்னா மாசா மாசா பணம் உங்க வீடு தேடி வரும்." என்றான் அவன்.

குழம்பிவிட்ட என் நண்பன் அந்த அம்மா ளிடம் கேட்டார், "ஏம்மா! எவ்ளோ உயர்ந்த கை இது. அத ஏம்மா விக்கறீங்க? அவை ரொம்ப பயனுள்ளவையாச்சே. அத வெச்சிக்கிட்டு உங்க தோட்டத்துப் பூக்களுக்கெல்லாம் தண்ணி ஊத்தலாமே. இந்த வலிமையான கையை வச்சுக்கிட்டு பூமியத் தோண்டி தங்கத் தானியமே எடுக்கலாமேம்மா?!"

அந்த அம்மாள் சொன்னாள், "எனக்கு நிறைய பசங்க இருக்கறாங்க. மூத்தவனுடைய கைகளை வித்தாத்தான் மத்தப் பசங்களை நல்லபடியா திடகாத்திரமா என்னால வளக்க முடியும்"

திடீரென்று குழப்பமேற்பட்டு தள்ளு முள்ளு நடந்து வரிசை உடைந்து போனது. நீலவண்ண சட்டையுடன், தங்கப் பிரேமில் கண்ணாடி போட்டவன், "தம்பி இது என் முறை... என்னைத் தள்ளிட்டு ஏமாத்தாதே" என்றான்.

முன்னால் தாவி அவனுடைய கைகளைப் பற்றி என் நண்பர், "என்ன விஷயம்? ஏன் கோபப்படறீங்க, உங்களப்பாத்தா வசதியானவரா இருக்கீங்க, ஏன் உங்க கைகளை விக்கனும்னு துடிக்கிறீங்க. உங்களப் பாத்தா வேலை இல்லாதவர் மாதிரி தெரியலியே" என்றார்.

நீலச் சட்டை அணிந்த நண்பர் சொன்னார், "நான் வேலையிலதாங்க இருக்கேன். ஆனா சரியான கடன்ல இருக்கேன். தாங்க முடியல என்னால. இப்பத்தான் எம் பொண்ணுக்குக் கல்யாணம் பண்ணி வச்சேன். ஒரு வீடு கட்டினேன். காரு ஒன்னு வாங்கினேன். இந்தக் கடனையெல்லாம்எப்படிஅடைக்கப் போறேன்னு தெரியல. என்னால முடியல..." கூறியவர் என் நண்பரின் கையை உதறிவிட்டு மீண்டும் வரிசையில் முண்டியடித்து நின்றார்.

சிவப்புநிற சேலை அணிந்த நவநாகரீகப் பெண் புதியதாய்ப் போட்ட நியான் விளக்காய் எங்களின் கவனத்தைக் கலைத்தாள். தங்கச் சங்கிலி போட்ட மணிபர்ஸ் அவள் தோளில் தொங்கியது. அது பாதி திறந்திருந்தது. அதில் ஒரு கை எட்டிப் பார்த்தது. ஒரு கையால் முகக் கண்ணாடியைச் சரி செய்தபடியே இன்னொரு கையில் பர்ஸை சரி செய்தாள். "நேரமாயிடலியே" என்றாள் அருகிலிருந்தவனிடம்.

"நேரமாயிடல, சரியாத்தான் வந்திருக்கீங்க, ஆனா நீங்க ஏன் கைகளை விக்க வந்தீங்க?" என்று கேட்டார் என் நண்பர்.

"இது எங் கையில்ல... எங்க வீட்டுக்காரர்து." என்றவள் பர்ஸில் கையைவிட்டு "கையை" மெதுவாக வருடினாள். "அவரு பெரிய கட்டிடக் கலைஞன். அவரு மக்களுக்காகப் பெரிய பெரிய பாலம், குடிநீர்த் தொட்டி, மசூதிகள், மேன்சன் எல்லாம் கட்னவர். ஷாஜகான் தன் மனைவிக்காக தாஜ்மகால் கட்னாரு. அது மாதிரி வேண்டாம். டிபன்ஸ் சொசைட்டியில சும்மா, 1000 அடியில ஒரு பிளாட் கட்னா போதும்னு அவருகிட்ட சொல்லிட்டேன். அவரு என் கையை வேணா வித்துக்கன்னுட்டாரு..."

அவளின் பேச்சின் இடையே குறுக்கிட்ட என் நண்பர் சொன்னார், "இருக்கலாம், அந்தக் கையோட மதிப்பு உங்களுக்குத் தெரியுமா? எவ்வளவு அவசியம் தெரியுமா, இது இல்லாம பஜாருக்கு எதைப் பிடிச்சுக்கிட்டுப் போவீங்க. கார்ல எப்படிப் போவீங்க? எஸ்கலேட்டர்ல எப்படி ஏறி இறங்குவீங்க, அப்பல்லாம் இந்தக் கைகள் உங்களுக்குத் தேவைப்படுமே..." என்றார் அவர்.

உடனே பிரகாசமாக இருந்த நியான் விளக்கு அவள் முகத்தில் பீஸ் போனது. "இது என் சொந்த விஷயம்... உங்களுக்கு என்ன வந்தது? ஏன் அனாவசியமா மூக்க நுழைக்கறீங்க" என்று சீறியவள் ஓடி கவுண்டரில் நின்றாள்.

"தேவைதான் உனக்கு" என்றேன் நான் அவனிடம். "சும்மா இரேண்டா ஏன்டா மூச்சப் பிடிச்சிக்கிட்டு பேசறே" என்றேன்.

"என்னத் தனியா விடுறா" என்று எரிந்தான் அவன்.

"நான் என்ன மாதிரி எழுத நினைச்சிருக்கன்னு உனக்குத் தெரியாது. பொறுத்திருந்து பார் எவ்வளவு அற்புதமான கதய எழுதப் போறம்பாரு..."

"நீயும் உங் கதயும்... எக்கேடுன்னா கெட்டுப் போங்க... நான் என் வேலையப் பாக்கறன். என் கைகளைத் தூக்கிக்கிட்டு எவ்வளவு தூரம் வந்திருக்கேன் நான்..." என்றேன்.

"இரு இரு நான் கேக்கறதுக்கு பதில் சொல்லிட்டுப் போ, நீ உன் கையை வித்துட்டா யார் அக்கார்டியன் வாசிக்கிறது?"

"அது என் சொந்த விஷயம்" எரிச்சலாகச் சொன்னேன். அந்தப் பெண்மணி போல நானும் கூறிவிட்டு வரிசைக்குச் சென்றேன்.

என் கைகளை விற்றுவிட்டு வீடு வந்து சேர்ந்ததும் என் மனைவி என்னை ஒரு மாதிரி பார்த்து இப்போது தான் கல்யாணம் ஆனவளைப் போல கட்டிப் பிடித்துக் கொண்டாள். என் கைகளை விற்ற பணத்தில் வாங்கிய மேல் கோட்டைப் பார்த்து சந்தோஷப் பட்டாள். "உங்களுக்குக் கச்சிதமா இருக்கு... இதப் போட்டுக் கிட்டா ரொம்ப அழகா இருக்கீங்க..." என்றாள்.

"இந்தக் கோட்டுல ஒரு சவுகரியம். அதப் போட்டுக் கிட்டா எனக்குக் கையில்லங்கற விஷயமே யாருக்கும் தெரியாது. அப்புறம் இன்னொன்னும் இருக்கு. இதல பாக்கெட்டுல அடிப்பாகமே இல்ல. பணம் குறையு தேன்னு கவலைப்படவே வேணாம்." என்றேன் நான்.

"இதுதான் நான் எதிர் பார்த்தது. நீங்க எவ்வளவு வேணுன்னாலும் செலவு பண்ணிக்கிட்டே போகலாம். அவை நிரம்பிக்கிட்டே இருக்கும். சரி இப்ப நம்ம எதிர்காலத் திட்டம் பத்தி பேசலாம்" என்றவாறு என் மடிமீது தலைவைத்துச் சாய்ந்தாள் அவள்.

"எப்படி இருக்கணும்னு சொல்லு?" என்றேன் நான்.

"முறையா இருக்கணும்"னு சொன்னவள், சற்று யோசித்து "முதல்ல எது எது தேவைன்னு ஒரு பட்டியல் போட்டுக்கலாம்" என்றாள்.

"நாம முதல்ல ஒரு பங்களா வாங்கணும்" என்றவள் ஆமோதிப்பதற்காக என் முகத்தைப் பார்த்தாள்.

"ஆமாம் கடல் பக்கத்துல வாங்கணும்" என்று நான் ஒத்து ஊதினேன்.

"நல்ல கதவுங்க தேக்கு மரத்துல இருக்கணும். சுவ ரெல்லாம் திம்முன்னு இருக்கணும். திறந்திடு சீசே சேம்னா திறக்கிற மாதிரி தானா திறக்கிற ஸ்பிரிங் கதவு வேணும். மேல சரவிளக்கு தொங்கணும்" என்றாள்.

"ஆமா, அந்த லைட்டப் போட்டா பொழுதே விடிஞ்ச மாதிரி வெளிச்சம் வரணும்" என்றேன் நான்.

சந்தோஷத்தில் கைகளைத் தட்டினாள், "ஆஹா நினைக்கவே அழகா இருக்குமே நம்ப வீடு" என்றாள்.

"நம்ம வீட்டு புல்வெளியில நான் நடப்பேன். எக்கச்சக்க ரோஜா. அதுல ஒன்ன குனிஞ்சு பறிப் பேன்..." என் குரல் தடுமாறியது. எனக்குக் கைகள் இல்லாதது அப்போதுதான் உரைத்தது. ஒரு சோகம் என்னைத் தாக்கிச் சென்றது.

"கையில்லாம நம்ம வாழ்க்கை எப்படி மாறிப் போச்சு இல்லையா" என்றேன் என் மனைவியிடம்.

அவளோ, "அதெல்லாம் ஒன்னுமில்லிங்க. உங்க கை போயிடுச் சேன்னு நீங்கதான் அழறீங்க. ரெண்டு மூணு நாளு போனா சரியாயிடும். நம்ம தெருவுல எவ்ளோ பேரு கையே இல்லாம இருக்காங்க. அவங் கல்லாம் சந்தோஷமா இல்லையா. போய் நீங்க அவங்களப் பாருங்க... இனிமே எப்படி வாழலாம்னு கேட்டுப்பாருங்க" என்றாள்.

இது ஒன்னும் மோசமான யோசனை இல்ல. மத்தவங்க அனுபவத்தைக் கேட்டுக்கறது நல்லதுதான்.

மாலையில் என் வீட்டு ஜன்னல் அருகே நின்றபடி என் பக்கத்து வீட்டுக்காரன் மாலிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவன் என்னைப் பார்த்ததும் சந்தோஷத்தில் குதித்தான். "ஆஹா... நீ கூடவா... உன் கையுமா... வாழ்த்துக்கள்..." என்று கூறி ஆச்சரியப் பட்டான். அவனும் என்னைப் போலவே மேலங்கி அணிந்திருந்தான்.

"ஆமாம் மாலிக் சார், ஆனா எனக்கு வித்தியாசமா இருக்கு, ஏன்னா எனக்கு கையில்லாத முதல் நாளா இருக்குமே அதனாலோ என்னவோ" என்றேன் நான்.

மாலிக் சொன்னார், "ஒன்னும் கவலப்படாதே, இப்போதான் வாழ்க்கைக்கு சந்தோஷச் சுவை சேர்த் திருக்க... வா சிலபேரை நான் உனக்கு அறிமுகப் படுத்தறேன்"

அவர் என்னை சௌத்திரி சாரின் வீட்டுக்கு அழைத் துச் சென்றார். அவர் தன்னுடைய வரவேற்பு அறை யில் பெரிய அட்டகாசமான மாலைநேர விழாவைக் கொண்டாடினார். அங்கே நிறைய பேர் வந்தார்கள். கன்வர் சார், கான்பகதூர் சார், இன்னும் அக்கம் பக்கத் திலுள்ள பெரிய பெரிய ஆளுங்க எல்லாம் மேலங்கி அணிந்திருந்தார்கள். அவர்கள் எல்லாம் நவீன வீடியோ கேசட் ரிக்கார்டர் பற்றியோ, இறக்குமதி செய்யப்பட்ட காரின் சட்ட திட்டங்களைப் பற்றியோ பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்தைப் பார்த்து மாலிக் சார் சொன்னார், "நண்பர்களே இங்கு ஒரு குழப்பமான மனநிலையில் ஒருவர் வந்திருக் கிறார். அவருக்குக் கைகளில்லாம் எப்படி வாழ்வது எனச் சொல்லுங்கள். இந்தப் புதிய சூழ்நிலையின் உள்ளும் புறமும் பற்றி அவருக்குச் சொல்லுங்கள்..." என்றார்.

அம்புபோல கன்வர்சிங்கின் ஆலோசனை என்னை நோக்கி வந்தது. "கைகளை மறந்திருங்க. வாழ்க்கை சந்தோஷமா வாழத்துவங்கும்." என்றார் அவர்.

கான் சார் அதை தலையசைத்து ஆமோதித்தார். "ஏன் கையை வளர்க்கிறோம். வயதான காலத்துல நமக்கு உதவத்தானே" என்றார் அவர்.

சுபேதார் சார் சொன்னார், "கையைப்பற்றி மறந் திடுங்க... அது அதுங்க வேலையைச் செய்யட்டும்."

கொஞ்சம் நிறைவான மனதுடன் அவர்களுக்கு நன்றி கூறிவிட்டு வீடு வந்தேன். கிட்டத்தட்ட என் கையைப்பற்றிய எண்ணத்தை மறந்து விட்டிருந் தேன்.

ஆனால் அன்றைய இரவு தூக்கம் கண்ணைக் கொண்டு போன சமயத்தில் ஜன்னல் கதவை யாரோ தட்டுகிற ஓசை. நல்ல கரும் இரவு. மங்கலான நில வொளி ஜன்னல் வழியாகக் கசிந்து கொண்டிருந்தது. நான் எட்டிப் பார்த்தேன். ஆனால் எதுவுமே காண வில்லை. என் கண்களை மூடினேன். மீண்டும் ஜன்னல் கதவைத் தட்டும் சத்தம். இப்போது ஜன்னல் கதவைத் திறந்து கொண்டு இரண்டு கைகள் நுழை வதைப் பார்த்தேன். அவைகள் விரல்களால் நடந்து வந்தன. என் கண்களைக் கசக்கிக் கொண்டு மறுபடி பார்த்தேன். சந்தேகமே இல்லை. அவை என் கைகள் தாம். அவைகள்தாம். இரண்டு கைகளால் என்மேல் குதித்து என் மார்பில் விளையாடின. நான் நெகிழ்ந்து போனேன். பிறகு அவை என் மேசை மீது ஏறின. ஒரு கை என் பேனாவை எடுத்து துண்டுக் காகிதத்தில் எழுதியது. நான் எழுந்து சென்று பார்த்தேன். "உங்கள் கைகள் உங்கள் வலிமையான கிடங்குகள்" என்று

இருந்தது. நான் அவற்றை எட்டிப் பிடித்து என் மடியில் வைத்தேன். ஆனால் அவை போக்கு காட்டி விட்டு நழுவி ஜன்னல் வழி சென்று விட்டன.

என்ன நடந்தது என்பதை என் மனைவியிடம் சொன்ன போது அவள் சிரித்தாள், "நீங்க கனவு கண்டுட்டு உளர்றீங்க" என்றாள். "உங்க கைகள் மேல அளவு கடந்த ஆசை வச்சிருந்தீங்க அதுதான்... அந்த இழவுதான் உங்க மனசுல கனவா வந்திருக்கு" என்றாள் அவள்.

மறுநாள் காலை. நான் சௌத்ரி சார் வீட்டுக்குச் சென்றேன். "உங்க கைகளை எப்பவாவது பார்த்திருக் கீங்களா?" கேட்டேன், "என்ன சொல்ற நீ... இல்லாத கையை எப்படிப் பாக்கறது?" என திரும்பிக் கேட்டார்.

இதே கேள்வியை கன்வர் சாரிடம் கேட்டதற்கு சாவதானமாகச் சிரித்துவிட்டு "சகோதரா, உன் கையும் என் கையும் உழைச்சுகளைச்சிடுச் சுங்க. எங்காவது ஆழமா தூங்குங்க. எங்காவது மூட்டையில போயிக்கிட்டு இருக்கும்" என்றார்.

ஆனால் அடுத்த நாளும் அதே போல் நடந்தது. என் கைகள் ஜன்னல் வழியாக வருவதை நான் பார்த்தேன். நான் அவற்றை என் கடைக் கண்ணால் பார்த்தேன். அவை இரண்டும் என் படுக்கையை வட்டமடித்து விட்டு ஒன்றாக நடனமாடின. பிறகு என் மேசைமீது ஏறின. என்னுடைய கையுறைகள் மேசையின் ஒரு மூலையில் இருந்தன. அவற்றில் புகுந்து கொண்டு கைகள் ஆடின. அந்த மேசையின் மற்றொரு மூலை யில் இருந்த அக்கார் டியன் மீது அவை நடனமாடின. அவைகள் இசைத்த சோககீதம் என் கண்ணில் கண்ணீரை வரவழைத்தது. என் மனைவி எழுந்தவள், நான் அழுவதைப் பார்த்து பயந்து "ஏன் என்ன ஆச்சு?" என்றாள்.

"என் கைகள் அக்கார்டியன் இசைக்கறது உனக்குக் கேட்கலையா?" என்றேன்.

அவள் அறையை சற்றும் முற்றும் பார்த்தாள்.

"இங்க எதுவுமில்லையே, ஒருவேள கனவா இருக்கும்"னு சொன்னாள்.

"அது ஒன்னும் கனவு இல்ல. அந்தக் கைகள் அடிக்கடி என்கிட்ட வந்துகிட்டே இருக்கு. இந்த வீட்டிலுள்ள ஒவ்வொரு பொருள் மீதும் ஏறுது. அவை என்மேல ரொம்பப் பாசம் வச்சிருக்குங்க. என்கிட்ட திரும்ப வரணும்னு விரும்புதுங்க. அது முடியாதுன்னு அதுங்களுக்குத் தெரியல."

காலையில் எழுந்ததும், "கைச்சந்தை"க்குச் சென் றேன். அப்போதுதான் கடையைத் திறந்தார்கள். பணி யாளர்கள் கூட்டி பெருக்கித் துடைத்துச் சுத்தம் செய்து ஷோகேசில் அடுக்கிக் கொண்டிருந்தார்கள். என் கைகளை ஆர்வமாகத் தேடினேன். அவைகள் அங்கு இல்லை. நான் மேலாளரிடம், "ஐயா என் கைகளைத் திருப்பிக் கொடுத்திடுங்க... உங்க பணத் தையும் இந்த மேலங்கியையும் கூட நான் திருப்பிக் கொடுத் திடறேன்" என்றேன்.

மேலாளர் ஆச்சரியமாகப் பார்த்தார். "எதுக்குக் கைகளைத் திருப்பிக் கேக்கறீங்க? அவை என்ன வேலை செய்யுதுன்னு உங்களுக்குத் தெரியாதா?" அவர் என்னிடம் ஒரு படத்தை விரித்தார். ஒரு தகிக்கும் பாலைவனம். எங்கு பார்த்தாலும் கைகள் முளைத்திருக்கின்றன. நான் என் கண்களை மூடி னேன். நான் கண்களைத் திறந்தபோது அந்தப் பாலை நிலம் எங்கும் கல்லறைகள். கல்லறை வாசகங்களுடன் காணப்பட்டது. "எவ்வளவு ஆனாலும் பரவாயில்லை. என் கையைக் கொடுங்க" என்றேன்.

அப்போது பெரிய கூட்டமொன்று கதவை முட்டி உள்ளே வந்தது. நிறையபேர் தங்கள் கைகளை விற்க வந்திருந்தார்கள். அந்த நெரிசலில் நான் சிக்கி வாசலில் விடப்பட்டிருந்தேன்.

"என் கைகள்... ஐய்யோ கடவுளே என் கைகள் எனக்குத் திரும்ப வேண்டும்." எனக் கத்தினேன்.

ஆனால் யாரும் என்னைப் பார்க்கவில்லை. ஒரு பெரிய முதலையைப்போல அந்தக்கடை அதனு டைய வரிசையாளர்களை விழுங்கிக் கொண்டிருந்தது.

என் நண்பன் கடையின் ஓரத்தில் நிற்பதைப் பார்த்தேன். "இதப் பாருப்பா... என் கையை நான் மறுபடியும் வாங்க வந்தண்டா..." என்றேன். "என்னைக் கவனிப்பா எனக்கு உதவுப்பா யாருமே என்னைக் கவனிக்கலப்பா..." என்றேன்.

அவன் என்னைப் பார்த்து வெற்றுச் சிரிப்புடன் புன்னகைத்து, "இந்தக் கைகள் இல்லாம சந்தோஷமா இருக்க முடியுங்கறபோது அது ஏன் உனக்கு, இங்க பார் நான் என்ன கொண்டாந்திருக்கேன் பார்..." என்றவன் ஒரு பாக்கெட்டைத் திறந்து காட்டினான். அதில் அவனுடைய கைகள் படுத்துக் கிடந்தன.

"உன் கத என்னாச்சு. வலிமையான, உலகையே குலுக்குற, வாழ்க்கையின் அர்த்தத்தச் சொல்ற கதைன்னியே?"

"அத யாரும் வெளியிடல" என்றான் அந்தப் பத்திரிக்கையாளன்.

என்னைத் தனியாக விட்டுவிட்டு வரிசையைப் நோக்கிச் சென்றான் அவன்.

❑❑❑

*(இதை எழுதிய **Najmal Hasan Rizvi** ஒரு பாகிஸ்தானிய எழுத்தாளர். "கலீஜ் டைம்ஸ்" என்ற பத்திரிக்கை நிருபர். சலீம் ஜாப்பரி விருது உட்பட பல விருதுகளைப் பெற்றவர். உருதுவில் எழுதி வருகிறார்.*

***`Haath Bechnealai`*** *என்கிற கதைதான் இங்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது)*

❑❑❑

# ஜே.வஹாப்தீன்

(இலங்கை)

## கவனிப்பற்ற கவிதை

கனகாலமாய்
துருப்பிடித்துக் கிடக்கிறது
இந்தக் கவிதை
கையை அறுக்குமென்று
கையில் எடுக்காத
கத்தியாய்...

கூர்மையுடையதாய்
இருப்பது தவறென்றால்,
அதற்கு -,
கத்தியென்று பெயரில்லை.

கவிதை ஒன்றும்
இதுபோல்.- இனி
கறையான் பிடிக்கப்போகிறது;
பாவனை இல்லாமல்.

கோழிகள் -
கால்களால் கிளரும்,
குப்பைக்குள் கிடக்கின்ற
குறுநெல் ஒன்றை
காகம் கொத்திப் பறக்கிறது.

சுடுமணலில்
போத்தல் உடைந்து
கவிதை துடிக்கிறது.
முட்கள் அதிகம்
இந்தக் கவிதைக்கு.

கூர் இல்லாத கத்தியும்,
முள்ளில்லாத மீனும்,
உலகம் தேடுகிறது;
கவிதை -
கதறி அழுகிறது
கண்ணீர் இல்லாமல்...

## ஊமைக் கனவு

காற்றை -
கட்டிவைக்க முடிகிறது;
கனவுகளுக்கு
பாய்போடத்தான் முடியவில்லை!.

கனவுகளுக்கு
இறகும் இல்லாத காலம்
சொண்டும் உடைந்து
சோம்பேறியாய்,
விழுந்து படுக்கத்தான்
போகிறது கனவு.

நெஞ்சைச் சுட்டு
கரியாக்கி,
அதைச் சப்பிக் கடித்து
பல்லை வெள்ளையாக்கி
கனவு சிரிக்கிறது.

உடலின் இரத்தத்தை
அதிக நாள் உறுஞ்சி
வெளி நாட்டவர்போல்
கொழுத்துவிட்ட கனவின்
கால்கள் இரண்டும் கொஞ்சம் -
உயிரோடு இருக்கிறது.
வேகமாய்,
பறக்கவோ,
ஓடவோ முடியாமல்
பரிதாபமாய்க் கிடக்கிறது.

இப்படி ஒரு கனவை
நான் கேட்கவில்லை.
இந்தக் கனவு -
கர்ப்பத்தில்
வெண்புறாவோடு
விளையாடியதால்
இப்படியாய் இருக்கிறது.

## கடந்து போனவை...

என்னைப் போல
எனக்கும் சிந்திக்க ஆசை
என் மூளைக்குள்
ஒன்றுமில்லை அதைத்தவிர.

பெருங்ஷகோடை ஒன்று
என்னைச் சுட்டெரித்த கடைசிப் பொழுது
அதனோடு எல்லாம் முடிந்தது.

புத்தகங்கள் அருமையானவை
என்னை அவை அழகுபடுத்தின
இப்பொழுது அவை என்னை
வேதனைப்படுத்துகின்றன.

செய்திகளைப் பார்த்து
அச்சம் கொள்ளும்படியாய் ஆனது
சூரியக்கதிர்கள் சுட்டெரித்து
சொல்லும் சேதி என்ன?

மானுடம் என்பது என்ன்?
முடிவிலியாய் நீளும்
ஒவ்வொரு அதிர்வுகளும்
கோபம் கொள்ளும்படியாய் ஆனது.

அடர்த்தியான ஒளி படருகின்ற
பூமியில் மனிதருக்கான வாழ்வுரிமை
எல்லா இடங்களிலும்
பறிக்கப்பட்டிருக்கிறது

அது யாரையோ திருப்தி செய்வதற்காக
கட்டுமானப்படுத்தப்படுகிறது

நிலவுப் பந்தலில்
சந்திர இருக்கைகளில்
வாழப்போகும் மனிதனுக்குத் தொடரும்
எதிர்த்தள உணர்வுகள்.

பொதுமைவாதிகளின்
அடர்த்தியான பகுதிகளுக்குள்
இன்னும் புரியாமை மிச்சமிருக்கிறது.

– இளைய அப்துல்லா,
லண்டன்

நன்றி : செந்தூரம் (இலங்கை)

## ஹைக்கூ
## சில ஹைக்கூ செய்திகள்

ஹைக்கூ என்னும் கவிதை வடிவம் உருவகம், உவமை மற்றும் எந்தக் கவிதை வழிவகைகளையும் பயன்படுத்துவதில்லை. மாறாக, ஐம்புலன்களின் பதிவுகளை வெற்றிகரமாய் நிரல் படுத்தும் முறையினால் நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் ஆற்றல் பெற்றுள்ளது.

– ஜியார்ஜ் ஸ் வெட்.

ஹைக்கூ என்பது நம்மை அழைக்கும் கைச்சைகை, பாதி திறந்த ஒரு கதவு தூய்மையாய் துடைக்கப்பட்ட ஒரு கண்ணாடி.

– பிளித்.

பாறைகளுக்கு உள்ளே ஒளிந்திருக்கும் சிலையை உளி கண்டுபிடிக்கிறது. ஹைக்கூவும் அப்படியே சொற்களுக்குள் உள்ள கவித்தையை கண்டு பிடிக்கும் சொற்கள் தொடக்கமே; முடிவல்ல.

– பிளித்.

ஹைக்கூ படைப்புலகில் அடியெடுத்து வைக்கும்போது இயற்கையின் முன்னே (எளிமையும்) உண்மையும் தாழ்ச்சியும் கொண்டவையாக அதே சமயம் அச்சமற்று சுதந்திரமாயும் இருத்தல் வேண்டும். அப்போதுதான் இயற்கையிலிருந்து விலகாமல், பிரியாமல் இருக்க முடியும்.

– ஒட்சுஜி.

படிமம் என்பது ஒரே கருத்தல்ல. அது ஒரு கலவை போன்றதும் முடிச்சுப் போன்றதுமாகும். இதிலிருந்தும் இதன் ஊடேயும் இதற்குள்ளும் கருத்துக்கள் நீர்ச்சுழல் போல பொங்கிப் பெருகும் ஓவியத்தையும் சிற்பத்தையும் போன்றே கவிதைக்கும் இது பொருந்தும்.

– எஸ்ரா பவுண்ட்.

(கணையாழி 1998 ஜூலை இதழிலிருந்து எடுக்கப்பட்டது.)

## ஆசி கூறும் காலைச் சேவல்

குணத்தைத் தூர எறிந்து விட்டு
பணத்தை எதிர்நோக்கும் மக்களோடு!
உனக்கெதற்கு உறவு தோழி! விலகிடு!
உனக்கெனும் பாதையில் சென்றிடு.

தேவையெனும் போது தேவசபையிலும்
தேவாராதனை முடிய தேரடி வீதியிலும்
தேங்கும் நிலை உனக்கெதற்கு
தேதி குறித்து எழு! மனத்தேசு பெறக்கு!

தூசிநிறை உலகில் இதமாய்
ஆசி கூறும் காலைச் சேவலாய்!
நேசி உலகை! நெறியாய் வாழ்வாய்,
பாசி விலக்கல் நேரிய கடனாய்!

கூசும் குணமுடை மனிதம் அஃறிணை
மாசு துடைக்கும் எண்ணம் உயர்திணை
யேசுவின் கல்லடியும் ஒரு தீவினை
பூசு உன் முத்திரை! அஃதுன் குணவாசனை!

**- வேதா.**
**இலங்காதிலகம்.**
**டென்மார்க்.**


**விரைவில் இலண்டனில் ஈழத்து**
**தமிழ்நூற் கண்காட்சி-2008**

ஈழத்து, புலம்பெயர் தமிழ் எழுத்தாளர்களின் எழுத்து வடிவங்கள் காட்சியில் இடம்பெறும்.

அரசியல், அழகியல், ஆன்மீகம், இதிகாசம், இசையியல், சமயம், வரலாறு, ஓவியம், ஓலைச் சுவடிகள், நாவல், நாடகம், சிறுகதை, சிறுவர் இலக்கியம், கவிதை, திரைப்படப்பிரதி, தொல்லியல், நூலகவியல், போராட்டப் பதிவுகள், சிறுசஞ்சிகை, விவசாயம், புவியியல், சோதிடம், மொழிபெயர்ப்பு... என விரியும் ஈழத்து நூல்களின் கண்காட்சி.

உங்கள் படைப்புகளுடன், படித்து முடித்த நூல்களும் ஈழத்து எழுத்தாளர்களின் ஒலி, ஒளி இழை நாடாக்களும் அனுப்பலாம்.

அனைத்து எழுத்தாளர்களின் பழைய புதிய படைப்பு களையும், அமரத்துவமான படைப்பாளிகளின் புகைப்படம் உள்ளிட்ட தகவல்களையும் அனுப்புங்கள்.

இந்தக் கண்காட்சிக்கு தங்களால் முடிந்த ஒத்துழைப் புக்களை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புக்கு: R.Mahendran (முல்லை அமுதன்)
34 REDRIFFE ROAD, PLAISTOW
LONDOON, E13 OJX U.K. TEL: 0044 20 85867783


## சுயசரிதை

ஊருக்காக
மழை வேண்டி
வேள்வி நடத்தும்
அப்பாவுக்கு
வீட்டுக் கூரையின்
ஓட்டைகளின்
எண்ணிக்கை தெரியாது!

அடுக்களை ஆட்சியில்
அலட்டும் அம்மாவுக்கு
உலைவாயை மட்டும்தான்
மூடத் தெரியும்!

மழையில் நனைந்து
வேசம் களைந்த நரியாய்
வீட்டுக்குள் நுழைவான்
அண்ணன்!

புகுந்தகம் போன அக்கா
சக்கரவர்த்திமனைவியாய்
சங்கடப்படுத்துவாள்!

பட்டியலோடு
பாசம் செலுத்தும்
சிறுசுகள்!

நான்
செவிடாய்
ஊமையாய்
குருடாய்
குறையில்லாமலே
இருத்தப்பட்டு விட்டேன்!

**- மா. மோகனா,**
*மஸ்கெலியா,*

## விசித்திரங்கள்...

- இளமையில் கல் என்றார்கள்
முன்னோர்கள்.
எங்கள் சிறுவர்கள்
புத்தகங்கள் சுமக்கும் வயதில்
கற்களைச் சுமக்கின்றார்கள்!

- ஆயுத பூசை
அமர்க்களமாக நடந்தது
அலுவலகங்களில்.
ஆராத்தி எடுத்தன
லஞ்சம் வாங்கிய கைகள்!

- மந்திரங்கள் ஓதி
அர்ச்சனை செய்யும் அர்ச்சகர்
அவலக்குரல் எழுப்பினார்...
வரம் கொடுக்கும் கடவுளை
திருடிவிட்டார்களாம்!

- வாரத்தில் மூன்று நாள்
பட்டினியால் வாடும்
ஏழைத்தாய் இன்று
சமைத்த பின்பும்
பட்டினி கிடக்கின்றாள்...
விரதப் படையலை உண்ண
காக்கைகள் வராததால்!

**- வண்ணை தெய்வம்.**


வெளிவந்துவிட்டது

**பொல்லாத மனிதர்கள்**

(சிறுகதைகள்)

ஆழமாகச் சிந்தித்து
எழுதப்பட்ட சிறுகதைகள்.

கிடைக்குமிடம்:
**வண்ணை தெய்வம்,**
I ALEE RAOULDUFFY
BAT - BRETAGNE
RES: FONTAGNEMALLET
93420 VILLEPINTE
FRANCE


**சிறுசஞ்சிகைகள் சில :**

**பதிப்புத் தொழில் உலகம்**
2, மனோகரன் வீதி,
சேத்துப்பட்டு, சென்னை–600031

**தெரிதல்**
(கலை இலக்கிய மாத இதழ்)
1,ஓடக்கரை வீதி, குருநகர்,
யாழ்ப்பாணம்.

**இனிய நந்தவனம்**
5.புதுத்தெரு,
(சி.எஸ்ஐ.மருத்துவமனை எதிரில்)
உறையூர், திருச்சி–003,
தமிழ்நாடு, இந்தியா.

**கம்பன்**
6 RUE PAUL LANGEUIN
45140 GARGES LES GONEDDE
FRANCE.

**அலையோசை**
C/o E.JUDES,
7, SQUARE DES ANGLAISES
93800 EPINAY SUR SEINE
FRANCE.

**சமகாலம்**
39, NAPIER ROAD
OXFORD
OX 4 3HZ
U.K.

**முற்றம்**
C/o A.V.DAMIAN,
106, AVE.DU. 8MAI 1945
94170 LE PERREUX
FRANCE.

**கண்ணியம்**
30, கந்தசாமி சாலை,
பெரியார் நகர்,
சென்னை–82

**முங்காரி**
புலமைப்பண்ணை,
சுகர்கேன் அஞ்சல்,
கோவை–641007
இந்தியா.

**நாளை விடியும்**
4/7 முருகன் இல்லம்,
பாரதிபுரம் முதல் தெரு,
கைலாசபுரம் (அஞ்சல்)
திருச்சிராப்பள்ளி (மா) 620014,
தமிழ்நாடு, இந்தியா.

## ஐயோ பரிதாபம்!

நாடுவிட்டு வந்த நாம் தஞ்சம் தனைக்கோரி
நிம்மதியாய் வாழ நான் நன்மனையும் நாடி
பாடுபட்டுத் தொழில்தேடி எம்காலில் நிற்க
பகலிரவாய்த் திரிந்தொரு தொழில் பெற்றும்
வெடவெடத்த குளிர்நாடாயினும் விரும்பிவாழ
வதிவிடவுரிமை பெற்றிட ஆலாய்ப் பறந்து
கிடைத்ததும் சொந்தவீட்டு மோகம் அலைக்க
காலை மாலை பேதமற்ற உழைப்பிற் சிலர்

உண்ண உணவிருந்தும் உண்ண நேரமின்றி
உறவுகளிருந்தும் உரையாட ஓய்வின்றி
பொன்னிலும் பொருளிலும் அவாக்கொண்டாலும்
போகித்து மகிழ்வெய்தப் பொழுதற்று
எண்ணக் கனவுகளிற் கடன் கணக்குப் பார்த்து
ஏற்றவழி வகுத்துத் தொகுத்து விடைகாண
எண்ணற்ற இரவுகளை துயிலின்றித் தொலைத்தே
ஏங்கி உழல்பவர்நிலை ஐயோ பரிதாபம்!

பஞ்சுப் படுக்கையுடன் பலவிதப் பொருட்களோடு
புதுச்சொந்த மனைதனை மாளிகையாக்கியே
நெஞ்சினில் வெறுமைகொண்டு நோயாளி போன்றே
நெட்டுயிர்பவர் உளநிலை இறையறியும்
கொஞ்சும் மனைவிமக்களோடு குலவும் நிலையிழக்க
கொண்ட கோலத்துடன் பிள்ளைகள் வளர
துஞ்சுவதே எம்மிற் சிலரது அவலநிலையாகிடத்
தாயக முத்திரையோடு இரட்டை வாழ்க்கை

அறியாத புதுப்புது நோய்கட்கு இடமளித்தே
இளமைத்துடிப்பினில் உடலைக் கவனியாமற்
தறிபட்ட பாடாகத் தாம்பட்டு வாழ்ந்து காட்ட
தட்டுப்பாடும் கட்டுப்பாடும் அற்றவராகியே
குறியொன்று பணந்தேடல் எனத் திடமாகிடத்தம்
கவனத்தை அவற்றிலே நிதம் சுற்றவிடுகின்ற
அறியாமை நோய்கொண்டோரைப் புலத்திலேயவர்
அறியாமல் உடலுள்ளே நோய்கள் குடிபுகல்

நோய்பீடித்து நொந்துமனம் பிதற்றி நிற்க
நொடிப்பொழுது வருடங்களாகக் கழிய
தாயன்புதேட அவளுருவம் மனத்திரையில் ஓட
தள்ளாதகாலம் வந்து வருந்து முன்பே
ஆய்ந்து முன்யோசனையுடன் நாம் நடந்தால்
ஆனந்தமுடன் எம்வாழ்வு கழியுமன்றோ!
தேய்வதும் வளர்வதுமான அழியும் செல்வத்துக்கு
தேகத்தைத் தீனியாக்காமற் சிந்திப்போமே!

- வேலணை வீணா
(விக்னா பாக்கியநாதன்)